உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்




| மலர் 27 | இராக்ஷஸ ஆு மாசி மீ 1உ [13—2—76] | இதழ் 2 |
| --- | --- | --- |


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## திருவியலூர் உய்ய வந்த தேவநாயனர்

அருளிய

## திருவுந்தியார்—உரைவிளக்கம்


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை


(மலர் 26 இதழ்–12 பக்கம் 593–ன் தொடர்ச்சி)

அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்
கவிழும்இவ் வல்லலென் றுந்தீபற
அன்றி அவிழாதென் றுந்தீபற.

கட்டுப்பட்டிருக்கின்ற உயிரறிவின் தளைகளாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் அவிழ்ப்பதற்காக விளங்கும் சிவஞானத்துடன், அருள் வயப்பட்டு அன்புடன் கலந்து, பிரிப்பின்றி நின்றவர்களுக்கு, எல்லாத் துன்பங்களுக்கும் காரணமாயிருக்கின்ற அஞ்ஞானமும், மற்றைப்பாச காரியங்களும் ஒழிந்துபோகும். இவ்வாறின்றி,வேறுஎந்த முயற்சியினாலும் இவை ஒழியமாட்டா.

பதி, பசு, பாசங்களாகிய அநாதி நித்தியப் பொருள்கள் மூன்றில் பதியும், பசுவும் அறிவுடையவை. பாசம், அறிவு அற்றது. அறிவற்றதாகிய பாசம், அறிவுள்ளதாகிய உயிரை அநாதியே பற்றிநிற்றலால், அதன் அறிவு முழு நிறைவுடையதாயிருப்பதில்லை. பசுவைப் பற்றுவதாகிய பாசம் பதியைப் பற்றுவதில்லையாதலால், பதியறிவு எப்பொழுதும் முழுநிறைவுடையதாயிருக்கிறது. உயிருக்குள்ள கேவலம், சாலம், சுத்தம் ஆகிய மூன்று நிலைகளில், முன்னைய இரண்டு நிலைகளிலும் அது பாசத்தோடு கட்டுப்பட்டிருக்கும். சுத்த நிலையில் மட்டுமே, அதன் பாசக் கட்டுப்பாடு நீங்கி, அது சிவத்துடன் ஒன்றிப் பேரின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும். கேவல நிலையில் உயிரைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது, ''பிரதிபந்தம்'' என்று சொல்லப்பெறும் ஆணவமலம், காலநிலையில் அவ்வாணவ மலத்துடன் அநுபந்தமாகிய கன்மமலமும், சம்பந்தமாகிய மாயாமலமும் உயிரைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆணவமலம்,உயிருடன் கலந்துநின்று அதன் அறிவு, இச்சை, செயல்களைத் தடுத்தலால், ''பிரதிபந்தம்'' எனப்பட்டது கன்மமலம், உயிர் செல்லுமிடமெல்லாம் தொடர்ந்து சென்று, சுகதுக்க மோகங்களை அதற்குக் கூட்டுதலால், ''அநுபந்தம்'' எனப்பட்டது. 'அநு' என்பது, 'தொடர்ச்சி''என்னும் பொருளினது. மாயாமலம் உயிருடன் கூடித் தநு, கரண, புவன, போக முதலியனவாய் நிற்றலால் ''சம்பந்தம்'' எனப்பட்டது.

மும்மலக்கட்டுள் பட்டு நிற்கும் உயிருக்கு, அக்கட்டு நீங்கினாலன்றி அது இன்பம் பெறுமாறில்லை. இக்கட்டுக்களை

அறுப்பதற்குக், கட்டற்ற ஒருவரே வல்லவராயிருக்கமுடியும். பதிப் பொருளாகிய சிவம், மும்மலக்கட்டுக்களில் ஒன்றேனும் இல்லாதவர். பதியாகிய அவர் ஒருவரைத் தவிர, மற்றைத் தெய்வங்கள் எல்லாம் பசுக்களேயாதலின், அவைகளுக்கு அவையவற்றின் தகுதிகளுக்கேற்ப, ஆணவமலம் ஒன்று மட்டும், ஆணவம்,கன்மமாகிய இரண்டு மலங்கள் மட்டும், ஆணவம்,கன்மம், மாயையாகிய மூன்று மலங்களும் என்ற முறையில், மலக் கட்டுப்பாடு இருந்தே தீரும். கட்டற்ற பதிப் பொருளாகிய சிவம் உயிர்களின் பக்குவமறிந்து, அவற்றின் கட்டையறுப்பதற்கு, அருளுருக் கொண்டு ஆசாரியனுகிவந்து அநுக்கிரகம் செய்கின்றது. குருந்தடிக் குரவரிடம் அநுக்கிரகம் பெற்ற மாணிக்கவாசக சுவாமிகள், "கட்டறுத்து எனையாண்டு" என்று அருளுவதால் இதனை அறியலாம். பார்க்கும் ஆற்றலையுடைய கண் இருளுக்குட்பட்ட பொழுது, எதனையும் பார்க்காது. கதிரவன் தோன்றியவுடன் கண்ணெளி, கதிரவனெளியுடன் கலந்து பொருள்களைக் காட்டுகிறது. அதுபோலவே, அறியும் இயல்புடைய உயிர்கள், அநாதியே தமது சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய இருளுக்குட்பட்டு, ஒன்றையும் அறிய முடியாது தவிந்தன. பரம கருணாநிதியாகிய சிவபெருமான், ஆசாரிய மூர்த்தமாகி எழுந்தருளி வந்து, அருளொளி பரப்பியவுடன், ஆன்மஒளி அருளொளியுடன் கலந்து பேரின்பத்தை நுகரும். அருளால் உண்டாகும் பரஞானவொளி, பந்த இருளை அகற்றி, உயிருக்குச் சிவத்துடன் சேரும் நிலையை உண்டாக்குவதால், அப்பரஞானம் ஒன்றே, உயிருக்கு இன்றியமையாத நற்றுணை என்பதை உணர்ந்து கொள்ளல்வேண்டும்.

சிவபெருமானது திருவருளால், மெய்ஞானம் கைவரப் பெற்றபின்னரும், அவரிடத்துச்செய்யும் அன்பின்முதிர்ச்சியே பேரின்பத்தை நல்கும். மணிவாசகப் பெருமானுக்குச் சிவஞானத்தைப் போதித்துத் சிவமயமாக்கிய பின்னரும், அவர் அன்பை வேண்டி அழுது நின்றமையைத் திருவாசகம் நமக்கு உணர்த்துகின்றது. சிவபரம்பொருள் புறத்தே உருவெடுத்து வரும் குரு வடிவம். 'ஞானவடிவ''னெனவும் அவர் அகத்தே

அயரா அன்பினுள் வரும் வடிவம், ''அன்பு வடிவ''மெனவும் சொல்லப்பெறும்.

சித்தாந்த சைவ நன்னெறியில் நின்று ஒழுகுபவரே, சிவ பெருமானது ஞான வடிவத்தைக் கண்டு அதன் வழியாக அன்பு வடிவத்தை அறியும் தகுதி வாய்க்கப்பெறுவர். உயிர் களை 'வா' என்று கூவியழைக்கும் அருளின் திறத்தை மற்றை யோர் எவ்வாறு அறிவர்? தம்முடைய அறிவினாலேயே அவித்தை நீங்கப்பெற்று, 'நாமேபிரமம்' என இருக்களண்ணு வோர், தம்மைப் பிரமம் என்ற அளவில் அமைந்து அதன்மேல் தலைவனை அறியவேண்டிய அளவுக்குச் செல்லாதவர்களாய்ப், பயனிழந்து நிற்பர். சமய குரவர்கள் முதலிய அருளாளர்கள் அன்பு நெறியில் நின்று, அருளைப் பெற்ற பெருமையுடைய வர்கள். ''ஆடும் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுதற் கன்புநிலை தேடும் பருவம் இது கண்டீர்'' என்பது தாயுமான அடிகள் திருவாக்கு. பந்த நீக்கம் செய்யும் சிவஞானமும், அதன் வழியாக வரும் அன்புமே, துன்ப நீக்கம் செய்து இன்ப ஆக்கத்தை வழங்குமென்பது முடிந்த முடிபான உண்மை யாகும்

(தொடரும்)

# "கரும்பு தரு சுவை எனக்குக்காட்டினை"

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய
சுவாமிகள் அவர்கள்
இளவரசு, மதுரை ஆதீனம்.

''இறைவனின் இன்னருளை எடுத்தியம்பும் தீந்தமிழ்த் திருமுறைகளை, எவ்வளவு முறை திருப்பித் திருப்பிச் சுவைப்பினும் நமக்கு உவட்டவோ. வெறுப்பு ஏற்படவோ செய்யாது. அதிலும், திருவாசகமாம் தீந்தேனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. திருவாசகத்திற்கு நேர் திருவாசகமேதான் திருவாசகத்துள் எந்த கைவைப்பினும் தேனை அள்ளி அள்ளிப் பருகலாம். திருவெம்பாவை வேண்டுமா? திருச்சதகம் வேண்டுமா? திருச்சாழல் வேண்டுமா? சிவபுராணம் வேண்டுமா? எதை எடுத்துக் கொண்டாலும், அதில் பக்தித் தேன் சொட்டும்''

''... ... ... ... ...
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனித்ததுவே''

இப்பாடலை, இராமலிங்க சுவாமிகள் வெறுஞ்சொற்களால் அடுக்கிச் சொல்லவில்லை என்பதனைச் சற்று ஆழ்ந்து படிக்கும்போதுதான் உணரப் பெறுவோம்.

## இன்பமும் துன்பமும்

உலகிலே உள்ள நாமெல்லாம் இன்பத்தைப் பெறவே விழைகின்றோம். துன்பத்தை விரும்பி ஏற்றுக்கொள்பவர் மிகச் சிலரே. ஆனால், இன்பம், இன்பம் என்று நினைத்துக் கொண்டு, நாம் எதையெல்லாம் செய்கின்றோமோ அது துன்பமாய் முடிவதை, முடிவிலேயே காணப் பெறுகின்றோம், துன்பம் உண்டாவதற்குக் காரணம், விரும்பிய காரியம் கைகூடா

மற் போவதுதான். நாம் நினைக்கிற காரியங்கள் எல்லாம் சரிவர நடைபெற்று விட்டால், திருப்தியும் இன்பமும் அடைகின்றோம். நடைபெறாத விடத்து, அதிருப்தியும், அதன் பயனாய் துன்பமும் அடையப் பெறுகின்றோம், இவற்றிற் கெல்லாம் அடிப்படை ஆசை, பற்றுக்களாலேயே எல்லாத் துன்பங்களும் தொடருகின்றன.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் துன்பத்தைத் தருவன. கானலை நீர் என்று எண்ணிக் கடுவெளி அலையும் மானுக்கும், நமக்கும் பேதமே இல்லை. ஆனாலும், நாம் துன்பந்தரும் உலகிலே வாழ வேண்டியதிருக்கிறது லௌகிக விஷயங்களில் பங்கு கொள்ள வேண்டியதிருக்கிறது எனினும், அவற்றை நிலையென நம்பி, அவற்றில் ஆழ்ந்து மூழ்கிவிடாமல் வாழப் பயின்று கொள்வதே நிலையான இன்பத்தைத் தேடுவதற்கும், முத்திப் பேற்றிற்கும் உரிய வழிகளாகும்.

### இறைவனும் உயிர்களும்

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுகப் பற்று விடற்கு"

என்பார் வள்ளுவர் பெருமான். உண்மையான பற்றினை வைக்க வேண்டிய இடம், எம்பெருமானின் திருப்பாத கமலங்களே ஆகும். இந்தப் பற்றினை நமக்கு ஏற்படச் செய்பவனும் இறைவனே. பழவினையின் தொடர்பால் இறைவனைப் பற்றி எண்ணும் எண்ணமும், உயிர்களுக்கு வந்து கை கூடப் பெறும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" எனச் சிவபுராணம் ஆண்டவனை வணங்குவதற்கு, அவனருளும் வாய்க்கப் பெறல் வேண்டும் எனச் சான்று பகருகின்றது.

பெறுதற்கரிய மானிடப்பிறவி வாய்த்து விட்டால் மட்டும் போதாது. இப்பிறவியிலேயே அரிதான ஞானத்தையும், கல்வியையும் அடைவதற்கான வழியை நாம் தேடிக்கொள்ளல் வேண்டும். இப்படிச் சொல்வதனால், இப்போதைக்கு நமக்கு ஞானமும் ஏற்படாது. இறைவனின் கருணையும் கிட்டாது. காலம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று,

வீணே காலத்தைக் கழித்தலும் புத்தியாகாது முயற்சி திருவினையாக்கும்.

"தெய்வத்தால் ஆகாதெனினு -முயற்சி தன்
மெய் வருந்தக் கூலிதரும்"

என்பதையும், நாம் மறந்து விடலாகாது

விறகிலே தீயைப் போன்றும், பாலிலே நெய்யைப்போன்றும் மறைந்துள்ள மாமணிச் சோதியாம், எம்பெருமானை நாம் உறவாகிய கோலை நட்டு, உணர்வாகிய கயிற்றினுல் வாங்கிக் கடைய நிச்சயமாய் நமக்கு இரங்கி அருள் புரிவான், விட்ட குறை தொட்டகுறை எப்படியும் நம்மை வந்து அடையவே செய்யும்,

நமது மனமானது, மும்மலங்கட்கு அடிமையான ஒன்ருகும். எனவே, எப்போதும் இரும்பு போன்ற கடினத் தன்மை உடையதாகவே இருக்கிறது. ஓதியும் உணராதது இறைவனை உள்ளே வைக்காதது. பொய்யே செய்து, புறம் புறமே திரியும் இயல்பினை உடையது. இந்த இரும்பு மனத்தை உருகச் செய்பவன் இறைவனே. ஒரு பிள்ளை, தன் தாயைச் சில காலங்களில் மறந்து விடுவதும் உண்டு. ஆனுல், தாயினுல் எந்தக் காலத்தும் தன் பிள்ளையை மறந்துவிடும் இயல்பு கிடையாது. அது போன்று, எல்லாம் வல்ல எம்பெருமான் இரும்பு மனத்தினராகிய நம்மை அகன்று போகாதவாறு கவர்ந்து, தமது அருள் என்னும் தீயினுல் நம் இரும்பு மனத்தை உருகச் செய்து, அதன் வழியாய் என்பினையும் உருகுவித்து. தம் கழல் அடிகளாம் இனிய கருப்பஞ் சாற்றினையும் நமக்கு அருளுகின்ருர்.

அப்பர் பெருமானும், இதே சுவையை உண்டு திளைத்துத் தரும் இனிமையை "ஆலை படு கரும்பின் சாறுபோல, அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான் காண், சீல முடையார் சிந்தையான் காண்" என்னும் அடிகளால் கூறியதை, நாம் கண்ணுறும்போது, நமக்குச் சிவமாம், கரும்பாலைக்குச் சென்று திருவைந்தெழுத்தாம் சாற்றினை அள்ளிப் பருகி

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 29. A அப்பரெனும் அருளாளர்
## A தருமசேனர் தருமஞ்சேர்ந்தார்!

ஞான முனிவரான அப்பர் சுவாமிகளின் பெருமையைக் கூற ஒருநாவினுல் முடியாது என்கிருர் சேக்கிழார்பெருமான். தானே சிவானந்தப் பெருவாழ்வை அடைந்து 'மனிதர்காள் இங்கு வம் ஒன்று சொல்லுகேன்' எனக் கருணையுடன் நம்மை அழைத்து நல்வார்த்தை கூறிய பெரியவரின் பெருமையை எவருமே கூறமுடியாதன்ருே? ஞானமுனிவரான அவர் பிறந்த திருமுனைப்பாடி நாட்டின் இயற்கையே சதுரங்கசைன் யங்களை நினைவுறுத்துகின்றன. வாழைக் குலைகள் வளைந்து தொங்குவது யானைத் துதிக்கை போன்றும், முற்றிய கதிர்கள் வளைந்து சாய்ந்திருப்பது குதிரைப் பிடரி போன்றும் வயலி லிருந்து நெல் முதலான தானியங்களை எடுத்துச் செல்லும் வண்டிகள் தேர்களைப் போன்றும் அங்குள்ள மள்ளர்கள் காலாட் படைகள் போலும் காட்சியளிக்கின்றன கவிதைக் கண்களுக்கு.

கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக் கைமுகம் காட்ட
மருங்குவளர் கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகம் காட்ட

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்திக்க ஆவல் உண்டாகிறது அல்லவா? ''நமசிவாய'' என்னும் அஞ்செழுத்து நாமத்தான் எம்பெருமான். சிவன் செம்மை உடையவன். அவன் தரும் இன்பமே, தெவிட்டாத இனிமை உடைய கரும்பு தரும் இன்சுவையாகும்.

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்''

பெருஞ்சகடு தேர்காட்ட விஞர் ஆர்ப்பொலி பிறங்க
நெருங்கிய சாதுரங்க பல நிகர்ப்பனவாம் நிறைமருதம்.

நாவுக்கரசும் சுந்தரமூர்த்திநாயனாரும் பிறந்த திருமுனைப் பாடி நாட்டின் பெருமையை யார் கூறமுடியும்? திருவாமூர் என்னும் ஊரிலே புகழனர், மாதினியார் என்ற தம்பதிகள் திருவயிற்றில் பிறந்தார் திலகவதியார். சைவத்திற்குத் திலகம் போன்றவர் என்பதனுல் திலகவதி என அழைத்தனர் போலும்! சிறிது நாட்களுக்குப்பின், உலகத்தில் கலைகள் வாழுவதற்காக வும், தவநெறி வாழவும், அறியாமையான இருளைப் போக்க ஒரு சூரியன்போல் மருள்நீக்கியார் அவதாரம் செய்தார். கலிப் பகையார் என்ற பெருமையுள்ள சிவனடியாருக்குத் திலக வதியை மணம் பேசித் தீர்மானித்தனர். கலிப்பகையார் திடீ ரெனப் போருக்கு அரசனுல் அனுப்பப்பெற்ருர். அந்நிலையில் தந்தையான புகழனர் மறைந்தார். மாதினியார் என்ற அவ ரது மனைவியாரும் கற்புநெறி வழுவாமல் கணவருடன் மறைந் தார். கணவனுடன் உயிர்விடும் பெண்மணி அவள் உடலி லுள்ளரோமங்கள் எவ்வளவு உள்ளனவோ அவ்வளவு கோடி காலம் பொன்னுலகத்தில்வாழ்வார் என்கிறது காசிக்கண்டம் என்ற நூல்.

நீடு காதலனேடுயிர் நீத்திடும்
வீடில் கற்பினள் மெய்ம் மயிரொன்றினுக்கு
ஆடகப் பசும் பொன்னிலத் தாயிரம்
கோடி காலம் கொழு நனெடின்புறும்.

இதே நேரத்தில் போர்க்களம் சென்றிருந்த கலிப்பகையா ரும் வீர சுவர்க்கம் புகுந்தார் எனச் செய்தி வந்தது. 'என் தாயும் தந்தையும் என்னை அவருக்கே கொடுக்கத் துணிந்தார் கள். எனவே நான் அவருக்கே உரியவள். ஆதலின் நானும் உயிர்நீங்கி அவருடன் சேருகிறேன்' என உயிர் துறக்க நினைத் தார்திலகவதியார். தாயைப் போலச் சேய், நூலைப்போல் சேலை என்பது பழமொழி. திருமணம் புரியாமலே நிச்சயித்தவன் கணவன் என்றநேர்மையை என்னவென்பது! மருள்நீக்கியார் தனது சகோதரியின் திருவடிகளில் விழுந்து வணங்கி 'உன் னையே தாய்தந்தையாக எண்ணினேன் நீயும்இறந்தால் நானும்

உயிர் நீங்குகிறேன்' என்றார். கருணையுள்ளம் கொண்ட திலகவதியார். தம்பியின் மீதுமாத்திரம் அல்லாமல், எல்லாவுலகங்களும் வாழவேணுமென்ற எண்ணத்தில், தனது ஆபரண முதலானவற்றை நீக்கி, கருணையே தனது ஆபரணமாக விளங்க உயிர் தாங்கி உலகில் தவக்கோலம் கொண்டு விளங்கினர்.

"தம்பியர் உளராக வேண்டும்" என வைத்த தயா
உம்பருலகணையவுறு நிலை விலக்க உயிர்தாங்கி
அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதியாரிருந்தார்.

கவலை நீங்கிய மருணீக்கியார் அறம் பல செய்து விளங்கினர். வந்தவருக்குப் பொன்னளித்தும், விருந்தளித்தும் நந்தவனங்கள், குளம் வெட்டியும் பல நற்காரியங்களைச் செய்தார். இறைவனது அருளில்லாமையால் கொல்லாமை என்ற பெயரில் மறைந்து தவறுகள் செய்யும் சமண மதம் புகுந்தார். சமண நூல்களை நன்கு கற்றுத்தேர்ந்து, புத்தர்களை வாதில் வென்று, தருமசேனர் என்ற பெயருடன் விளங்கினர்.

இது இவ்வாறாகத் திலகவதியார் திருவதிகை என்ற தலத்திலே சிவபெருமானுக்குத் திருப்பணிகள் செய்து விளங்கினர்.

புலர்வதன்முன் திருவலகு பணிமாறி புனிறகன்ற
நலமலி ஆன் சாணத்தால் நன்கு திருமெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினல் திருப்பணிகள் பல செய்தார்.

திலகவதியார் திருவதிகைப் பெருமானிடம் "வேறு மதத்தில் சேர்ந்து அவமாகத் திரியும் என் உடன் பிறந்தவனைக் காக்க வேண்டாமா" என மனமுருகி வேண்டினர். ஒருநாள் இறைவன் திலகவதியார் கனவில் தோன்றி "நீ கவலையடையாதே உன் தம்பி முன் பிறப்பிலேயே ஒரு முனிவன். என்னை அடையத் தவஞ் செய்தான். அவனைச் சூலை நோய் உண்டாக்கித் தடுத்தாட் கொள்ளுகிறோம்" என்றார்.

வாகீசர் என்ற முனிவரொருவர் கைலைமலைச் சாரலில் தவமிருந்தார். அரக்கனான இராவணன் ஒருதினம் கைலைமலையைக் கையிலெடுத்தான். சிவபெருமான் தனது திருவடிவிரல்

நுனியால் மலையை அழுத்த, அடியில் அகப்பட்டுக் கொண்டு அரக்கன் அலறினன். "சிவபெருமான் சாமவேதத்தில் பெரும் விருப்புடையவர். சாமகீதம் பாடு" என வாகீசர் அவ்விடத்தில் இராவணனுக்கு வழி புகன்றார். இராவணன் சாமகானம் பாடி, இறைவனருள் பெற்று விடுதலையானன். இரக்கமிலா அரக்கனுக்கு வழிகாட்டி, அவனது தண்டனை குறையுமாறு செய்த வாகீசரை பூவுலகில் பிறக்குமாறு இறைவன் கட்டளையிட்டார். அவரே நாவுக்கரசராக வந்ததாக வரலாறு.

கைலையில் ஆலாலசுந்தரராக விளங்கினவர் சுந்தரமூர்த்தி நாயனராகவும், வாகீசமுனிவர் திருநாவுக்கரசராகவும், பட்ட மங்கை பிராமணர் ஒருவர் மாணிக்கவாசகராகவும் வந்ததாகவும் வரலாறுகூறுவர். ஞானசம்பந்தரின் முன்பிறப்பு என்ன என்று தெளிவாக எவரும் கூறியதாகத் தெரியவில்லை. ஞானசம்பந்தரை முருகனின் அவதாரம் என அருணகிரிநாதரும், 'திராவிடசிசு' என்ற பெயரால் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகளும் குறிப்பிட்டிருப்பதாகவும், **பெம்மான் முருகன் பிறவான் இறவான்** என்ற சம்பிரதாயத்திற்கு இது ஒத்துவரவில்லை. எனவே இது இன்னும் விவாதத்திற்கு உரிய செய்தியாகவே இருந்து வருகின்றது என்பர்.

திலகவதியாரிடம் கூறிய வண்ணமே தருமசேனருக்கு சூலை நோயை அருளினர் இறைவர். நெருப்பும் விஷமும் ஒன்ருகி வயிற்றைக் குடைவது போல வேதனையடைந்தார் தருமசேனர். கமண்டல நீர் தெளித்தும் மயிற்பீலி கொண்டு தடவியும் நோய் குறைபவேயில்லை. சமணர்கள் தவித்தனர். தருமசேனரைக் கைவிட்டுவிட்டனர். தருமசேனர் தன் சகோதரியான திலகவதியிடம் சென்றுவருமாறு தனக்கு உணவு பரிமாறுவனையனுப்பினர். திருவதிகை நந்தவனத்தினின்று வெளிவந்த திலகவதியார், தனது தம்பியிடமிருந்து வந்தவரை "தீங்குளவோ" எனக்கேட்டார். "சுகமா?" என்று கேளாமல் இப்படிக் கேட்கலாமா? என அன்பர்கள் நினைக்கலாம். இறைவர் தீங்கானசூலைநோய் தந்து தருமசேனரைத் தடுத்து ஆட்கொள்ளுவதாகக் கூறினரன்றே? அதனுல்

அந்த நோய் வந்துவிட்டதை அறியவே அவ்வாறு கேட்டனர் என்பது குறிப்பு. எனக்கு வந்துள்ள நோயை என் கூடப் பிறந்தவளிடம் கூறி,எனக்கு நற்கதியடையும் வழி கேட்டுவா என்ருர். ஆதலின் இங்கு வந்தேன்'' என்ருன் வந்தவன். ''நான் அங்கு வந்து தம்பியைக் காண இயலாது. சமணர்கள் வாழுமிடத்திற்கு நான் வரமாட்டேன்'' எனத் திலகவதியார் கூறினர். சமையற்காரர் திரும்பிச் சென்று தருமசேனரிடம் கூற, இரவோடிரவாக வெள்ளை வஸ்திரம் தரித்துக்கொண்டு, திலகவதியாரை வந்து வணங்கினர் தருமசேனர்.

''பரசமயப் படுகுழியில்விழுந்தவரே! எழுந்திரும்!''எனக் கூறிய திலகவதியார், ஐந்தெழுத்தையோதி திருநீறளித்தார். திருநீறணிந்ததால் அகவிருள் நீங்கியது. பொழுது புலர்ந்து புறஇருள் நீங்கியது. திருக்கோயிலுக்கு திலகவதியாருடன் பின்தொடர்ந்து வந்தார் தருமசேனர்.

திருநீறணிந்து அன்புருவாக மாறிய தருமசேனர் தனது சூலைநோய் தீர்க்குமாறு இறைவனைப் பாடினர்.

நீற்றால் நிறைவாகிய மேனியுடன்; நிறையன் புறுசிந்தையின் நேசமிக
மாற்றார் புரம் மாற்றிய வேதியரை; மருளும் பிணி மாயை அறுத்திடுவான்
கூற்றாயினவாறு விலக்ககிலீர் என நீடிய கோயில் திருப்பதிகம்
போற்றால் உலகேழின் வருந்துயரும் போமா றெதிர் நின்று புகன்றனரால்.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர்! கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத் துறைஅம்மானே.

திருச்சிற்றம்பலம்

தனது துயரும் உலகின் துயரும் நீங்க இவ்வாறு பாடிய காலத்து சூலைநோய் உடனே நீங்கியது. இறைவனருள் கிடைக்குமாறு செய்த சூலைநோய்க்கு நன்றி செலுத்தினர். 'அழகிய பாடல் பாடிய உனக்கு நாவுக்கரசு என்ற பெயர் விளங்கட்டும்' என இறைவனருளால் ஒருவாக்கு எழுந்தது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

109.

# மனக்கவலை மாற்றும் மருந்து

"சிவநெறித்தவ மணி"
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

உலகிலுள்ள மக்களில் பலர், எல்லா வசதிகளையும் பெற்றிருந்தும் மனதிலே கவலையுற்று அல்லல்படுகிறார்கள். அதற்குக் காரணம் நம்முடையதல்லாததை, நம்முடையதாகக் கருதியும், நமக்கு ஒரு அதிகாரமும் இல்லாதிருக்க, எல்லா அதிகாரமும் நமக்கு இருப்பதாகக் கருதியும், வருகின்ற அஞ்ஞானமேயாகும்.

விருப்பு, வெறுப்பற்ற ஞானிகள் மட்டுமே நமக்கு ஒரு அதிகாரமும் இல்லை என்பதை உணர்ந்து, இறைவனிடத்திலே சரணாகதி அடைந்து, கவலையற்ற வாழ்வு வாழ்ந்து வருகின்றனர் அதனாலேயே மணிவாசகரும்,

நாயில் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயாப் பிறவி உன்வசமே வைத்திட்டு இருக்குமதுவன்றி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

இதுகேட்டு மகிழ்ந்த வாகீசப் பெருந்தகையார் மனம் மொழி மெய்களால் இறைவனுக்குத் திருப்பணி செய்பவராக சிவசின்னம்தரித்து, எந்நேரமும் சிவபெருமானின் திருவடியை வணங்கிப்பாடி. கையில் உழவாரப் படை யேந்திக் கசிந்து உருகி நின்றார்.

இதுபற்றி அறிந்த சமணர்கள் மனமுடைந்து, அரசனும் இவ்வாறே சைவனாக மாறிவிட்டால் என்னவாகுமோ என எண்ணி அரசனிடம் சென்று பேசலாயினர்.

தருமசேனர் தகாத வழியான சமணத்தினின்று விலகி தரும வழியான சைவத்தைக் கடைப்பிடித்தனர். வாகீசர், தருமசேனராகி, நாவுக்கரசராக நற்பெயருடன் விளங்கினர்.

திருச்சிற்றம்பலம்

ஆயக் கடவேன் நானேதான் என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

என்று பாடியருளினர்.

குருநாதரிடம் தீட்சை பெற்று ஆண்டவனது திரு நாமத்தை அவர் உபதேசித்த முறைப்படி இடைவிடாது செபித்துவர அருளப் பெற்றவர்கள் மாத்திரமே, அஞ்ஞானத்தைப் போக்கவும், மனக்கவலையை மாற்றவும் வல்லவராக இருக்கின்றார்கள்.

அதனையே திருவள்ளுவரும்,

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்றார். தாள்சேர்ந்தார் என்றால் இறைவனது திருவடிகளை இடைவிடாது நினைந்தார் என்பது பொருள்.

இரவில் இருட்டு அறையில் உள்ள ஒருவன், அவனது கண்கள் நன்கு விழித்திருந்தாலும், அங்குள்ள பொருள்களைக் காணமுடியாது தன் கண்ணொளியால், இருளைப்போக்கவோ ஒளியை உண்டு பண்ணவோ முடியாது. அந்த அறையில் எரியாத திரி, விளக்கு, எண்ணெ முதலியன இருந்தாலும், அதனை எரியச் செய்வதற்கு, நெருப்புக் குச்சியோ எரிகின்ற வேறொரு விளக்கோ அவசியம்; மின் வசதிகள் உள்ள இக் காலத்தில் ஒரு அறையில் என்னதான், மின்விளக்கு எரிவதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்து வைத்திருந்தாலும், மின் சக்தி தேக்கி வைத்துள்ள இடத்திலிருந்து மின்சாரத்தொடர்பு (Electric Connection) ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியம்

அதுபோல, மானுடர்க்கு வெறும் கல்வியும், பதவியும், உத்யோகமும், பொருளும் பிறநலங்களும் இருந்தாலும் அவற்றால் உயிரிலுள்ள அஞ்ஞானமாகிய இருளைப்போக்கவும், மெஞ்ஞானமாகிய ஒளியைப் பெறவும் முடியாது மனதிலுள்ள மருளாகிய இருளை நீக்கி அருளாகிய ஒளியைப்பெற மெஞ்ஞான சூரியனாயிருக்கும் இறைவனது திருவருள் சக்தியைத்

தேக்கி வைத்திருக்கும் குருநாதர் மூலமாக தீட்சை பெற்று அவர்கள் அருளிய மூலமந்திரத்தை ஜெபிக்கவேண்டும். அப்படிச் செய்தாலன்றி மனக்கவலை வேறெவ்வித சித்துக்களாலும் மாய்க்கப்படவோ, மாற்றப்படவோ இயலாத ஒன்ருகும்.

குருநாதர் எரிகின்ற விளக்குப் போன்றவர். மற்றவர்கள் எரியாத விளக்குப் போன்றவர்கள். குருநாதர் மின்சக்தி ஏற்றப்பெற்ற பேட்டரி (Battery) போன்றவர். மற்றவர்கள் மின்சக்தி ஏற்றப்பெருத பேட்டரி போன்றவர்கள் குருநாதர் உள்ளொளியாகிய திருவருள் சக்தியை அவர்களுடைய குருநாதரிடமிருந்து பெற்றிருக்கிருர் எல்லாம் வல்ல இறைவனே தலையாய குருநாதர். மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவனே குருவடிவில் வந்து இணையார் திருவடிகளை அவர் சிரசில் வைத்து தீட்சை செய்வித்தார்.

தீட்சை என்ற சொல்லில் தீ என்ருல் கொடுத்தல் அல்லது பதித்தல் என்று பொருள் இறைவனது திருவருள் சக்தியை குருநாதர் சீடனிடத்துத் தொடர்பு படுத்துதல் ஆகும் சை என்ருல் சீடன் பல ஜென்மங்களில் செய்த பாவங்களை ஒழித்தல் ஆகும்

நாம் பல ஜென்மங்களில் செய்த வினைகளை யாருக்குச் செய்தோமோ அவர்களுடைய தன்மைகளுக்குத் தக்கவாறு இவ்வளவு புண்ணியம், இவ்வளவு பாவம் என்று இறைவன் பதிவு செய்து வைத்திருக்கிருர். அந்தப் புண்ணிய பாவமே சஞ்சித வினை எனப்படும். அப்புண்ணிய பாவங்களை ஒவ்வொரு பிறவியிலும் சிறிதுசிறிதாக இன்ப துன்பங்களாக ஊட்டுகிருர். அவையே பிராரப்தகன்மம் எனப்படும். அவ்வின்ப துன்பங்கள் நாம் செய்த வினை காரணமாகவே ஊட்டப் பெறுகின்றன என்ற ஞானமின்றி, அவை யார் மூலமாக வந்தனவோ அவர்களைச் சீறுவதும் அவர்களுக்குப் பதில் துன்பங்கள் விளைவிப்பதும், புது வினைகளாகி மீண்டும் துன்புறுவதற்குப்போடும் வித்தாக அமைகின்றன அவையே ஆகாமிய வினை எனப்படும்

சஞ்சிதவினை குருநாதரிடம் தீட்சைபெறுவதன் மூலமும் பிராரப்த கன்மம் அனுபவித்துக் கழிப்பதன் மூலமும் ஆகாமிய வினை, மீண்டும் பிறருக்கு மனதால், வாக்கால் உடலால், உடைமையால் கெடுதல் செய்யாதிருப்பதன் மூலமும் பிறவிக்கு வித்தாகிய வினைகளை ஒழித்துவிடலாம் தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்றபடி, யாருக்கு அதற்குரிய தவம் இருக்கிறதோ, அவர்களே அதில் நாட்டமுடையவர்களாகத் திகழ்வர். குருநாதர் உபதேசித்த முறையில், இறைவனுடைய திருநாமத்தை ஓதவல்லவர்கள் மட்டுமே, பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு மனக்கவலையின்றி வாழ்வார்கள் இதனை ஞானசம்பந்தப் பெருமானார் தனது நமச்சிவாயப் பதிகத்தில்,

நந்தி நாமம் நமச்சிவாய வெனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே.

என்று அருளியுள்ளார்கள்.

---


## "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6-00 வெளிநாடு ரூ. 10-00

**செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"**

தருமபுரம், மாயூரம் P. O.

உயர்மானுடம் - 6

# பிரமச்சரியம்

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி பி. ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

மலர் 27 6ம் பக்கத் தொடர்ச்சி)

'பிரமச்சரியமே' உயர்வாழ்க்கையின் அடித்தளம் என்று கூடச் சொல்லலாம். 'பிரமச்சரியம்' என்ற சொல்லிற்குரிய பொருள் மிக உயர்வானது ஆகும். 'புலனடக்கம்' அல்லது துறவு போன்ற தனித் தமிழ்ச் சொற்கள் கூட அதற்கு நேர டிப் பொருள் கொண்டதாக என்னல் உணர முடிய வில்லை. 'பிரமச்சரியம்' என்பதற்கு கடவுளைக் காண்பதற்கு வழி செய்யும் வாழ்க்கைமுறை என்பது பொருள் என்கிறார் காந்தியடிகள். இது போன்ற ஓர் உயர்வான பொருள்பற்றி எழுத எனக்குத் தகுதியில்லை என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரியும், நான் எழுதி வருகிற 'உயர்மானுடம்' கட்டுரைகள் முற்றிலும் என் அறிவின் கொடை என்றோ என் அனுபவத்தின் படையல் என்றோ வாசகர்கள் எண்ணி விடக்கூடாது. 'மகாத்துமா. விவேகானந்தர். பரமஹம்ஸர். திரு. வீ க., டாக்டர் மு; வ. போன்றவர்களின் அறிவை உங்கள்பால் வழி படுத்தியுள்ளேன்' என்று கூறிக் கொள்ளலாம். தவருன கருத்துக்கள் என்று நீங்கள் எண்ணினுல் அதற்கு உறுதியாகச் சொந்தக்காரன் நானுகத்தான் இருக்க கூடும்.

## 1. ஒழுக்கத்திற்கு உயர்வு குறைந்துள்ளதா?

என்னதான் உலகில் ஒழுக்கம் குறைந்துள்ளது போலத் தோற்றமளிப்பினும் ஒழுக்கக்திற்கு என்றுள்ள 'உயர்வு குறைந்து விடவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன் இங்கி

லாந்தில் ஓர் அமைச்சர் ஒரு வேசியோடு தொடர்பு கொண்ட தாகப் புகைப்படமும் செய்தியும் வெளியானதால் அவர் அமைச்சவையிலிருந்து நீங்கினர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் மைசூர் மாநில அமைச்சர் ஒரு பெண்ணோடு (சுமத்திரா) தொடர்புடையவர் என்ற செய்தி பரவி அவர் அமைச்சரவையிலிருந்து நீங்கினர். பின் அச்செய்தி பொய் என்று நிரூபிக்கப்பட்ட பின் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இன்றும் கல்விநிலையங்களிலும் பிற அலுவலகங்களிலும் அலுவலர்களிடையே இவ்வொழுக்கக்கேடு ஏற்பட்டால் மட்டும் உடனே நீக்கிவிடச் சட்டம் உள்ளது, சிலர் கயமைத் திரையில் ஒழிந்து வேசியர் இன்பம் துய்ப்பினும் அவர்களைச் சமுதாயம் உண்மையாக மதிப்பதே இல்லை.

## 2. யாருக்குத் தேவை பிரமச்சரியம்?

'பிரமச்சரியம்' என்ற தலைப்பைப் பார்த்தவுடன் இது திருமணமாகாத வாலிபர்களுக்குரியது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. திருமணம் ஆகாத வாலிபர்கள் முதல் வாழ்வின் இறுதி நிலையில் உள்ள வயோதிகர்கள் வரை அனைவருக்கும் வேண்டப்படுவது 'பிரமச்சரியம்' ஆகும்.

## 3. பிரமச்சரியம் என்றால் என்ன?

பிரமச்சரியம் என்பது பெண்ணோடு உள்ள உடல் உறவைத் தவிர்ப்பது மட்டும் என்று சிலர் தவருகப் பொருள் கொள்கிருர்கள். எந்த வகையிலும் விந்து விரயமாகாது தடுப்பது என்று சிலர் பொருள் கொள்கிருர்கள். இதுவும் முற்றிலும் சரியானது என்று கொள்ள முடியாது. விந்து வெளியேற்றத்தை மட்டும் சட்டுப் படுத்திஞல் மனிதன் பைத்தியமாகி விடுவான்.

இயற்கையாக கட்டுப்பாடும், உயர்வும் எல்லாவகையினின்றும் எழுவதே பிரமச்சரியம். சிந்தனையிலும், பேச்சிலும் செயல்களிலும், கட்டுப்பாடும் உயர்வும் இருக்க வேண்டும். பிரமச்சரியத்தை கடைப் பிடிக்க முயல்கின்றவனின் சிந்தனை வலு உள்ளதாக இருக்கும். அவனுடைய பேச்சில் உயி

ரோட்டம் இருக்கும். அவனுடைய செயல்களில் வெற்றி ஒளி வீசும் அவனால் இந்த உலகம் பெரும் இன்பத்தைப் பெறும்.

4. தவறுகள்: 1) இளைஞர்கள்

திருமணமாகாத இளைஞர்களில் பலர் இன்று வாழ்வில் நெறிதவறிய பெண்களோடு உறவு கொண்டு திரிகிறார்கள். திருமணமாகாத பெண்களும் அப்படியே. அதனால் அவர்களுக்கு ஏற்படும் தீமைகளைச் சொல்ல முடியாது. அதனால் திட சிந்தனையும், நேர்மைக்காக நிற்கும் துணிச்சலும் இல்லாதுபோய் விடுகிறார்கள். பல்வேறு நோய்களுக்கு உள்ளாகி எதிர்காலத்தில் அவர்கள் தங்கள் இல்லற வாழ்விலும் ஏமாற்றத்தைச் சந்திக்க நேர்ந்து விடுகிறது.

இன்னும் சில ஆண்கள் பெண்கள் தொடர்பின்றியும். பெண்கள் ஆண்கள் தொடர்பின்றியும் வெவ்வேறு வழிகளில் அற்ப இன்பத்தைத் துய்க்கிறார்கள். அதற்குப்பின் அவர்கள் பெருந்தவறு செய்து விட்டதாக ஏங்கித் தவிக்கிறார்கள். அவர்கள் தனித்து ஒதுங்கி வாழவே முற்படுகிறார்கள். அவ் ஆண்கள் பெண்களையும் அப்பெண்கள் ஆண்களையும் வெறுத்து ஒதுங்குகிறார்கள்.

2. திருமணமானவர்கள்

திருமணத்தின் நோக்கமே உடல் உறவுதான் என்பது போலப் பலர் எண்ணி அதிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள். உண்ணுவதும் உறங்குவதும் தினத்தேவையாக உள்ளது போல உடலுறவையும் தினத்தேவையாக ஆக்கிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் கணக்கில்லாத பிள்ளைகளைப் பெற்றுப் பின் அவற்றிற்கு வயிற்றிற்குச் சோரிடப் பாடுபடுவதே தங்கள் வாழ்க்கையாக உடல் சோர்ந்து அமைத்துப் போராடி வருகிறார்கள்' அவர்களால் எப்படி உயர்வாழ்க்கை வாழ முடியும்?

5. வருமுன் காத்தல்...

தவறுகள் நடந்தபின் அவற்றைத் திருத்துவதற்காகச் செய்யும் முயற்சிகளைவிட அவைநடக்காதே தடுக்க முயற்சிப்

பதுதான் அறிவுடைமையாகும். 12வயதிலிருந்து20வயது வரையிலுள்ள இளம் ஆண் பெண்களிடையேதான் அதிகமாகத் தவறுகள் தோன்றுகின்றன. இக்காலங்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மீது அதிகமான கவனம் செலுத்தி அன்புகாட்டி வழிப்படுத்த வேண்டும்.

6, தவறுகளிலிருந்து தப்ப முடியுமா?

பெண்களோடு தொடர்பு கொண்டவர்களும்சரி, சுய இன்பங்களில் பழகியவர்களும்சரி, அதிலிருந்து மீளுவது முடியாதது போலவே இருக்கும். அவர்கள் அதை வெறுத்தாலும் அந்தச் சுய இன்ப அரக்கர்கள் அவர்களை விடமாட்டார்கள் போலத்தான் தெரியும், ஆனல் முறையான நன் முயற்சிகளால் அவற்றை முறியடித்து முன்னேற முடியும்; நல்ல சான்றோர்களின் அன்பையும் அறிவுரைகளையும் பெற வேண்டும். அல்லது நல்ல நூல் துணை கொள்ளவேண்டும்.

7 முன்னேற்ற முயற்சிகள்:

திருமணமானவர்கள் தங்கள் மனைவியை உடலுறவு இன்பத்திற்கான ஒருபோகப் பொருளாக மட்டும் கருதாது தன் வாழ்க்கைக்கு ஒரு சிறந்த துணையாகக்(நண்பராக) கருத வேண்டும். இருவரும் மனதொத்த அன்போடு உடலுறவைக் குறைத்து, அன்போடு பேசி மகிழ்வதிலும், உறவினர்களை நேசிப்பதிலும் நாட்டிற்கு நல்லது செய்வதிலும் நாட்டங் கொண்டு வாழப் பயில வேண்டும்.

திருமணமாகாத இளைஞர்களும் யுவதிகளும் சிறந்த அறிவுத் தெளிவோடு கட்டுப்பாடாகவும் செயல்பட்டு மென்மேலும் வெற்றிகளைப் பெற முயற்சிக்க வேண்டும்.

8. பிரமச்சரியத்தைக் கடைப்பிடிக்கச் சில வழிகள்:

1) எந்த ஒரு செயலுக்கும் மனந்தான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. எனவே மனதில் எப்பொழுதும் நல்ல லட்சியங்களை நிரப்பிக் கொள்ளவேண்டும்.

2) தான் எந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பினும் அதைச் செம்மையாகச் செய்து முன்னேற முயற்சிக்கவேண்டும்.

3) நல்ல நூல்களைப் படிக்கவேண்டும். நல்லவர்களோடு பழகவேண்டும்; நல்ல கருத்து மிக்க சொற்பொழிவுகளைக் கேட்கவேண்டும்.

4) நாட்டிற்குச் சேவைசெய்யக்கூடிய நல்லியக்கங்களில் தங்களை பகுதி நேரத் தொண்டராக இணைத்துக் கொள்ள லாம். அது உணர்ச்சிகளுக்கு மடை மாற்றாக இருக்கும்.

5) பெண்களைத் தங்கள் தாயைப் போலவும் சகோதரி யரைப் போலவும் நினைக்க வேண்டும்.

6) அழகு என்பது வெளித் தோற்றத்தில் இல்லை மன உயர்வில்தான் உள்ளது என்பதை உணர வேண்டும்.

7) உணவில் அதிகமான காரம் புளிப்பு, உப்பு, இனிப்பு, இவற்றைத் தவிர்க்கவேண்டும். மாமிசம் போன்றவற்றை நீக்குதல் நல்லது.

8) மலச்சிக்கலின்றிப் பார்த்துக் கொள்ள வேண்டும். மலச்சிக்கல் பிரமச்சரியத்தின் பகையாகும்.

9) எந்தச் சந்தர்ப்பமாக இருப்பினும் பெண்களோடு தனிமையில் பேசுவதை விரும்புதல் கூடாது.

10) பகலில் கடினமாக உடல் உழைத்து வந்தால் இர வில் உடனடியாகத் தூக்கம் வந்துவிடும் உடலுழைப்பு இல் லாதவர்கள் உடற்பயிற்சியோ உலவுவதையோ மேற்கொள்ள வேண்டும்.

11) இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு முன்பே உணவை முடித்துக் கொள்ளவேண்டும்.

12) படுக்கைக்குச் செல்லும்போது குளிர்ந்தநீர் அருந்து தல் வேண்டும்.

13) இடது பக்கமாக ஒருக்களித்துப் படுத்தல் நல்லது. கட்டாயமாக குப்புறமாகப் படுக்கக்கூடாது.

14) இரவில் சீக்கிரமாகப் படுத்து மிக அதிகாலையில் எழ வேண்டும். சுமார் 4 மணிக்கு எழலாம்.

15) காலை மாலையில் இடுப்பளவு நீரில் சுமார் 20 நிமிடம் நிற்பது மிகவும் நல்லது.

16) கணவன் மனைவியர் தனித்தனி அறைகள் வீட்டில் இருந்தால் தனித்தனியாகப் படுக்கவேண்டும்.

17)குழந்தையை தனக்குமுன்னே படுக்கவைத்துஅணைத்துப் படுத்துக் கொள்ளுவது மிகவும் பாதுகாப்பானதாகும்.

18) உட்காரும் போதும் நிற்கும்போதும், நடக்கும் போதும் நேராக உடலை வைத்திருத்தல் மிகவும் பயன் அளிக்கும்.

19) சோம்பலுக்கு இடம்கொடுக்கவே கூடாது. சோம்பல் நேரத்தில்தான் காம அரக்கன் உள்ளத்தில் முழு ஆட்சி கொள்ளுகிறன்.

20) இயற்கை வெளியில் உலாவி வருதல், ஆசனங்கள் செய்தல், பிராணயமம் செய்தல் போன்றவை கைமேல் பலனைக் கொடுக்கும்.

21) வேறெந்த முயற்சியில் உடனடியான பலனைக்காண முடியாவிட்டாலும் இந்தப் புலனடக்க விஷயத்தில் வழிபாடு நல்ல பயனை நல்குகிறது

பிரமச்சரியத்தைக் கடைப்பிடிப்பதில் மீண்டும் மீண்டும் தோல்விகள் ஏற்படலாம். அதனுல் கொஞ்சமும் பின்வாங்க வேண்டிய அவசியமில்லை மனமாறப் புலனடக்கத்தை மேற்கொள்ளவேண்டும்; முயற்சிக்க வேண்டும்; "1906ல் நான் பிரமச்சரிய விரதம் பூண்டேன் அதாவது பூரணமானபிரமச்சாரியாக ஆக வேண்டும் என்பதற்கான என் முயற்சி 36 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. நான் விவரிப்பது போன்ற பிரம்மச்சரியத்தை (இன்னும்) நான் பூரணமாக அடைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது"[2] என்கிறர் மகாத்துமா; பின் நாம் தோல்விகளுக்காக மலைக்கலாமா?

கலைஞர்களையும், அறிவாளிகளையும், மேதைகளையும், விஞ்ஞானிகளையும் விட வள்ளுவர், புத்தர், இயேசு, காந்தி, போன்ற

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# திருமுருகாற்றுப்படை

## உரை விளக்கம்

'செந்தமிழ்ச் செல்வன்'
புலவர்: திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

### குன்றுதோருடல்

[மலர்-27 இதழ்1 -78ம்-பக்கம் தொடர்ச்சி]

''சேயோன் மேய மைவரை உலகமும்'' என்றபடி முருகன் குறிஞ்சிக் கடவுள் முருகன் மலைக்கடவுள் என்பதிலிருந்தே அவன் வழிபாடு மிகத் தொன்மையானது என்பது புலப்படும். தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளரும் மனிதன் முதல் முதல் தோன்றியது மலையிடத்தே என்கின்றனர் மலையில் வாழ்ந்த மக்கள் பின்னர் பிறநிலங்களில் குடிபுகுந்து அந்நிலங்களுக்கேற்பத் தம் வாழ்வைச் சீர்படுத்திக் கொண்டனர் தாம் வழிபடும் கடவுளுக்கும் பல்வேறு பெயரிட்டனர். வழிபாடும் வேறுபட்டது வெறியாடி வேலனை வழிபட்டனர்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒழுக்க சீலர்களே உலகப் பேரேட்டில் நிலைத்த இடத்தைப் பெறுகிறார்கள்.[3]

குறைவாக உண்டு, குறைவாகத் தூங்கி. குறைவாக அணிந்து — நிறைவாக எண்ணி. நிறைவாகப் பணியாற்றி நிறைந்த இன்பத்தையும் உயர்வையும் பெறுவதற்கான வழி பிரமச்சரியமாகும். புலன்களை அலைய விடுவதில்தான் இன்பம் இருக்கிறது என்று சிலர் தவறாகக் கருதுகிறார்கள் பிரமச்சரியத்தை மேற்கொள்ளுவதிலும் அதை அடைவதற்கான பயிற்சி முறைகளிலும் விவரிக்க முடியாத பேரானந்தமும் உயர்வும் மரியாதையும் இருப்பதை பயிற்சிசெய்து காணலாம்

1. மகாத்மா காந்தி — ஆரோக்கியத்தின் திறவுகோல் பக்கம்-56.
2. ,, ,, ,, பக்கம்-58,
3. டாக்டர் மு. வ. — உலகப் பேரேடு.

சிலப்பதிகாரத்திலும் இவ்வழிபாடு கூறப்பட்டிருக்கின்றது, குறிஞ்சி நிலக்கடவுள் "குறிஞ்சிக் கிழவன்" மலை கிழவோன் என்றும் அழைத்தனர். கிழவோன் என்றால்தொன்மையோன் என்பது பொருள். கந்த புராணத்தில் "மூதக்கார்கரு மூத்த வன்"என்றுஉள்ளது தொல்காப்பியனர் காலத்தும் முருகன் வழிபாடு இருந்தது மேலும் மலையிடை வாழ்ந்த மக்கள் தங் கள் கண்ணெதிரே கண்ட இயற்கைக் காட்சிகளைக் கண்டு அதிலே ஒன்றிப் போய் உளத்தில் மூகந்து மனதில் இடையரு மல் நினைந்து நினைந்து அதன் மணம், அழகு, இளமை இனிமை அருள் இவற்றை நன்கறிந்து தாம் வணங்கும் கடவுளுக்கு முருகன் என்றே பெயரிட்டனர். முருகையுடையவன் முரு கன் குன்றுதோராடல் முருகனுக்குச் சிறப்பானவீடு குன்று கள் யாவும் இருப்பிடம் அருணகிரியார் "ஆதி அருணசல மாய் அமர்ந்த பெருமானே" என்று அம்மலையே முருகன் என்றும் கூறினர். குன்றுதோருடல் ஒரு தலமல்ல. மலை களெல்லாம் சேர்ந்த ஒரு தொகுதி இதில் திருத்தணியும், விராலிமலை முதலியன அடங்கும் திருப்புகழில் 32 குன்று கள் குன்றுதோருடல் பகுதியில்தொகுக்கப்பட்டிருக்கின்றன. பதியெங்கிலுமிருந்து விளையாடிப் பல குன்றிலுமமர்ந்த பெரு மானே" என்றர் அருணகிரியார் இனி குண்டலி சக்தி அழி முனை அல்லது சூஷம்ன மார்க்கமாக மேல் நோக்கிச் செல் லுங்கால் ஆறுஆதாரச்சக்கரங்களில் அமைந்துள்ள ஒவ்வோர் இதழ்களிலும் சஞ்சரித்துப் போகும் அவ்விதழ்கள் மூலா தாரத்தில் 4 ஸ்வாதிட்டானத்தில் 6. மணிபூரகத்தில் 10 அனகசத்தில் 12. விசுத்தியில் 16. ஆக்ஞையில் 3 ஆக 51 இதழ்கள் இருப்பதால் அவற்றைக் குன்றுகள் என்று உவமிக் கப்பட்டது என்பது குன்றுதோருடலின் தத்துவார்த்தம்" என்று யோகம் பயின்றவர்கள் சொல்கின்றார்கள். இதை சங்கரர் தமது சௌந்தர்யலஹரி 9ம் ஸ்லோகத்தில் சொல்லு கிறார். அந்தந்த ஆதாரசக்கரங்களின் அதிஷ்டான சக்திகளை ஆகர்ஷித்துக்கொண்டு செல்வதைத்தான் நக்கீரர் "முழவுறழ் தடக்கையினியல வேந்திமென்றோட் பல்பிணை தழீஇ" என்று சொல்கிறார் என்று இரகசியார்த்தமாக பொருள் கொள்ள

லாம். இக்குன்றுதோறாடல் பதிகத்தில் நக்கீரர் முருகனின் மாறாத இளமையைச் சிறப்பாகக் கூறுகின்றார் எனலாம்.

190-197 பைங்கொடி நறைக்காய் இடை இடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந் தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர,

**உரை விளக்கம் :-**

முருகன் கோயில் பூசாரி வேலன் எனப்படுவான். முருகனுக்காக ஒருதலை மாலையைத் தொடுக்கிறான். நல்ல மணத்தையுடைய சாதிக்காயைப் பசுமையான கொடியில் இடை இடையே வைத்துத் தொகுக்கப்பெற்றது அந்தமாலை. பொருளைப் பொதிந்து வைக்கத் தக்க அழகான புட்டிலைப் போன்ற தக்கோலக்காய்களும் அந்த மாலையில் காணப்படுகின்றன. காட்டு மல்லிகை மலர்களாலும், கூதாளம் பூக்களாலும், அத்தலைமாலை அமைந்துள்ளது. விருப்பத்தொடு பூசாரிதொடுத்து முருகனுக்காகக் கையில் ஏந்தியுள்ள மாலையைப் பெருமான் ஏற்றுக்கொள்கிறான். மலைநாட்டுக் குரவர்கள், நறுமணம் வீசும் சந்தனம் பூசிய நிறம் விளங்கும் மார்பினை உடையார். வேட்டையாடுதல் போன்ற கொடிய தொழில்களை மேற்கொண்டோர். வலிய வில்லினைக்கொண்டு விலங்குகள் முதலியனவற்றைக் கொலை புரியும் தன்மையர். மூங்கில் குழாயில் சேமித்து வைத்த முற்றிய தேனாகிய கள்ளின் தெளிவை மலைநாட்டுச் சிற்றூரில் வாழும் தம் சுற்றத்தாருடன் உண்டு மலைவாணர்கள் மகிழ்கின்றனர். கள்ளுண்டு களித்துத் தொண்டகம் என்னும் சிறுபறையின் ஓசைக்கு ஏற்பக் கானவர் குரவைக் கூத்தாடுகின்றனர். குறவர்கள் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து குரவைக் கூத்தாடும் இடத்திற்கு முருகன் தெய்வ உலகப் பெண்களோடு வருகின்றான். 'தொண்டகச் சிறுபறைக்கு ரவை அயர' என்பது தொண்டகம் குறிஞ்சி

நாட்டுக்குரிய சிறிய பறை. அதை முழக்க பல பெண்கள் கைகோத்தாடுங் கூத்து. "குரவை என்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைபிணைந்தாடுவது" என்று சிலப்பதிகார உரையில் சொல்லப்பட்டது. குரவைக் கூத்தேகை கைகோத்தாடல் என்பது திவாகரம்.

198–205 விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டு சுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலை உடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
அரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில் கண்டு அன்ன மடநடை மகளிரொடு.

**உரை விளக்கம்:–**

முருகனைச் சூழ்ந்துவரும் தெய்வ உலகப் பெண்கள் மலை நாட்டு மகளிரைப் போலவே ஆடை அணிகலன்களோடு காணப்படுகின்றனர். விரலால் இதழ்களைக் கோதியதால் மலர்ந்த பூக்களால் கட்டப்பெற்ற தலைமாலைகளை அப்பெண்கள் அணிந்துள்ளனர். வெவ்வேறு வகையான பூக்கள் காம்போடு சேர்த்துக் கட்டப் பெற்றதால் அமைந்த அம்மாலைகள் பள்ளமான சுனைகளிலே உண்டாகிய மலர்களால் ஆனவை. வண்டுகள் மொய்க்க அத்தலை மாலைகளை இரட்டையாக அமைத்துக் கூந்தலிலே தேவ லகப்பெண்கள் சூடியுள்ளனர். கஞ்சா இலைகளால் ஆன பெருமை மிக்க தழை ஆடையைத் திருத்தமான மேகலை அணியத்தக்க இடையிலே உடுத்தி இருக்கின்றனர், இலை ஆடையிலே பல வகைப் பூக்களும், சிவந்த அடிமரத்தினையுடைய வெள்ளிய கடம்ப மலர்களும், வண்டுகள் மொய்க்குமாறு காணப்படுகின்றன. மயில் போலும் சாயலையும் மடப்பம் பொருந்திய நடையினையும் உடைய இத்தகு தேவருலகப் பெண்கள்சூழ முருகன் குன்றக் குறவர் குரவை ஆடும் இடத்திற்கு வருகின்றான். வேறுபடு நறுங்கால் என்பது பல மலர்கள் சேர்ந்த கண்ணியாதலால்

பலதிறப்பட்ட மணம்கமழ்கின்றது என்றும், அன்றி விரலால் தடவி வலிய மலரச் செய்ததால் தன் இயற்கை வாசனைக்கு வேறுபட்ட மணமுடைய என்றும் கூறுவர். கண்ணி என் பதை தலைமாலை என்றும் பொருள் கொள்ளலாம். மடநடை என்பதை இங்கு மடப்பம் பொருந்திய ஒழுக்கம் என்று பொருள் கொள்ளப்பட்டது. சாயலில் மயில் போன்றவர் என்பதற்கேற்ப மெல்லிய நடை என்று அவர்களின் நடையைச் சொன்னதாகக் கூறினும் பொருந்தும்.

206–215 செய்யன், சிவந்த ஆடையன், செவ்அரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும். காதினன்
கச்சினன், கழலினன், செச்சைக் கண்ணியன்
குழலன், கோட்டன் குறும்பல், இயத்தன்
தகரன், மஞ்ஞையன், புகரில் சேவல்அம்
கொடியன், நெடியன், தொடிஅணி தோளன்
நரம்பு ஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்புதுகிலினன்
முழவு உறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணைத் தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே; அதா அன்று.

**உரை விளக்கம்:–**

குன்றுதோறும் எழுந்தருளும் முருகன் சிவந்தமேனி நிறமுடையவன்; சிவந்த ஆடை உடுத்தியவன். சிவந்த அடிமரத்தினையுடைய அசோகினது குளிர்ச்சியுடைய தளிர் அசையும் காதினை உடையவன் அரையில் கச்சினை அணிந்துள்ளான். அவன் கால்களில் வீரக் கழல்கள் விளங்குகின்றன. வெட்சி மலர்களால் ஆகிய தலைமாலையினைச் செவ்வேள் அணிந்துள்ளான். முருகன் குழல், கொம்பு போலும் பல இசைக்கருவிகளை இசைப்பவன். ஆடு மயில் இவற்றை வாகனங்களாகக் கொண்டவன். குற்றம் இல்லாத சேவல் கொடியை உயர்த்தியவன். நெடியதிருஉருவம் உடையவன். வளையல்கள் அணியப் பெற்ற தோட்களைக் கொண்டவன். யாழின் நரம்பினைப் போல இனிமையாகப் பேசும் பெண்கள் கூட்டத்திலே காணப்படுகிறான். சிறிய புள்ளிகளையுடைய

நறுமணமும் குளிர்ச்சியும், மென்மையும் உடையதுகில் நிலத்திலே புரளுமாறு இடையில் முருகன் தரித்துள்ளான் இவ்வாறு முருகன், மலைவாணர் குரவைக் கூத்தாடும் இடத்திற்குத் தேவருலகப்பெண்களோடு வருகின்ருன். மத்தளத்தைப் போல உருவம் அமைந்த, பருத்த, பரந்ததன் கைகளோடு பொருந்த அணைத்து ஏந்தியவாறு மெல்லிய தோட்களையுடைய மான்பிணை போலும் பல மாதர்களைத் தழுவி அவர்களுக்கு முதல் கைகொடுத்து, அவர்களோடு மலைகள்தோறும் முருகன் விளையாடுகிருன். குன்றுதோறும் குறவரொடு கலந்து நின்று விளையாடுதல் முருகனின் நிலைபெற்ற பண்பாகும். ஆகமம் வேதம், மந்திரம் முதலிய கற்ருேர்க்கேயன்றி யாதும் அறியாத கள்ளையுண்டும், கொலை செய்தும், திரியும் வேடுவருக்கும் தழையாடையணிந்து அவர்களின் பெண்கள் தொகுதிக்கும் கூட தனது கருணையினல் சுலபமாக அடையக் கூடிய நிலையிலிருக்கிருன் எம்முருகன் என்ருர். குன்றுதோருடல் பகுதியில் இயற்கைவழிபாடும் அடுத்துவரும் பழமுதிர்சோலை பகுதியில் சாங்கிய வழிபாடும் கூறப்படுகிறது. குன்றுதோருடலில் குறவர் தொழும் குறிஞ்சிக் குமரனைக் காட்சி தருகின்ருர். இந்நிலை சில ஆன்மாக்களின் பரிபக்குவத்துக்கு ஏற்றதாயிருக்கும் என்ற நிலையில் இந்த இயல்பு சொல்லப்பட்டது. இதையும் அனுபவிக்கமுடியாத ஆன்மாக்கள் உண்டெனின் வாருங்கள்பழமுதிர்சோலை போவோம்என்று அழைக்கின்ருர்நக்கீரர்.

# ஏன்? மூன்று ஏன்?

திரு. ச. தேவதாசன் அவர்கள்,
கணக்கர் (clerk) குமாரசாமி மடம்,
கேதாரகட்டம் வாரணசி.

தென்னுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றியென புகழ்ந்து, அவனே தஞ்சம் என, வையகத்தில்வாழ்ந்துவரும் சிவனடியார்கள் வாழ்த்திவணங்கி வழிபடுகிறார்கள் அவ்விறைவன் திருமுகத்தில் இருக்கும் கண்கள் மூன்று ஏன்?

ஒன்றே குலம் ஒருவனேதேவன் என கொள்கை இருந் தாலும், அன்றுமுதல் இன்றுவரை முழுமுதற் கடவுளின் பிரி வாக விளங்கி வழங்கி வருவது பிர்மா; விஷ்ணு, சிவன் என்ற மூன்றேதான் மூன்று தெய்வமாக மூன்று மாறுபட்ட சூழ் நிலையிலேமூன்று வேறுபட்ட உருவமாக காண்கிறோம் ஏன்?

இவ்வாறு பிரித்தது யார்? எவரால் பிரிக்கப்பட்டது எல் லாம் நம் ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் முன்னோர் களாலும்தான் அவர்கள் கடவுளைக் கண்ணால் கண்டார் களா? இல்லையா? அநேகர் ஆயிரம் விளக்கங்களை அள்ளி வீசு வார்கள். ஆனால் அது நம் ஆன்றோர்களின் ஒரு கற்பனை. மனக் கற்பனையிலே மனத்திலே மலர்ந்த எண்ணத்தை செய லாக்கி இப்படித்தான் தெய்வமெனக்கொண்டார்கள் அதைப் பற்றி விரிவாய் விவாதிப்பதைவிட சிந்திப்பதே மேல் இந்த கற்பனையும் எண்ணமும் எப்படி வந்தது. எவ்வாறு தோன் றியது ஏன்? எதனால்? எதற்கு? என்பதை ஆராய்ந்து அறி தலே சிறப்புடமை.

அந்த மூன்று தெய்வங்களையும் உலகத்தோடு, உலகிலே உழலும் உயிரினங்களோடு, உயிரினங்களில் உயர்ந்த மனித

றேடு, மனிதன் வாழும் வாழ்க்கையோடு, பிறப்போடு, இறப்போடு ஒவ்வொன்ருக ஒவ்வொரு நிலேயோடும் ஒப்பிட்டு சித்தத்தில் ஏற்றி சிந்தித்து அறிந்தால் நம் ஆன்றேர்கள் சான்றேர்கள், பெரியோர்கள், முன்னேர்கள் கற்பனையில் கண்ட தெய்வம் மனத்திலே மலர்ந்த எண்ணம். ஒரு தெய்வீக சக்தியால்தான், மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியால்தான் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையான கருத்தாகும் என்று அறியலாகும்.

இந்த மனிதப் பிறவிக்கு கண் இரண்டுதாஞ? இல்லவே இல்லே. மூன்ருவதாக ஒரு கண் இருப்பதையே மறந்தவர்களாய் வாழ்கிறேம். அது துறந்தவர்களுக்கு தெரியும். துறந்தவன் என்ருல் காவியுடையணிந்து கழுத்திலே உருத்திராட்சம் உருள நீண்ட சடைமுடியும் வளர்ந்த தாடியும் கொண்டவரா துறந்தவர்? அல்லது மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை விட்டவர்தான் துறவியா?இல்லே பின் யார் துறந்தவர்? நான் செய்தேன் நீ செய்தாய் என்ருல்தான் நடந்தது உன்ஞல்தான் நடந்தது என்ற ஆணவ மமதையை அகம்பாவ எண்ணத்தை விட்டு அன்பே சிவம் எனக் கொண்ட சிவனடியார் துறந்தவர் அவருக்குத் தெரியும் மூன்ருவதுகண், அவருக்கு உண்டு மூன்ருவது கண். அவரால்தான் உணரமுடியும் மூன்ருவது கண்ணுகிய ஞானக்கண்ணே நான், நீ என்பதை என்ஞல் உன்ஞல் என்பதாகிய இவ்விரண்டை விட்டு மூன்ருவதாகிய அவஞல் அதாவது அவனுகிய சிவனே நினைத்து ஞானக் கண்ணே பெற்றிடவே, தன்னிலே முன்னிலே என்ற இரண்டைவிட்டு படர்கை நிலேயான அவனே அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை நாம் அறிந்து ஞானக் கண்ணே பெற்றிடவே மனித பிறவி என எண்ணவேண்டும்.

உலகிலே உயரினங்கள் நிலத்திலே, நீரிலே, ஆகாயத்திலே என மூன்றுபிரிவாக மூன்றுவேறுபட்ட சூழ்நிலேயிலே மூன்று மாறுபட்ட குணத்தோடு பழக்கத்தோடிருக்கின்றன

நிலத்தில் உள்ளவை நடந்து நகர்ந்தும், நீரில் உள்ளவை நீந்தியும், பறவைகள் பறந்தும்தான் உயிர் வாழ முடியுமே

தவிர ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு நிலேத்து வாழவே முடியாது நாமும் இந்த உயிரினங்களில் ஒன்றுதான். சில உயர்வையும், தனிச் சிறப்பையும் பெற்றுள்ளாமே தவிர பிறப்பு, வாழ்வு இறப்பு இம்மூன்றிலே நம் நினைவை நிறுத்துவதில்லே. ஏன் பிறந்தோம்? எதற்கு பிறந்தோம்? எதை சாதிக்க பிறந்தோம்?எதைச் சாதித்தோம்? என்ன செய்கிறேம்? எங்கிருந்து வந்தோம்? எங்கு போவோம்? என்பதை சிந்திக்க வேண்டும். ஜடமாகிய பூமி (உலகம்) அதில் அசைவனவாகிய உயிரிணங்கள் (நாம்) நாம ரூபங்கள் கொண்ட இந்த இரண்டுமே அழியக்கூடியது மூன்றுவதாக ஒன்று உள்ளது அழியாத வஸ்து அது சாசுவதமான ஆனந்தவடிவாய் உள்ளது அவ்விடம் துன்பம்இல்லே துக்கம் இல்லே மரணமும் இல்லே. அமர நிலேயாக அழியா பேரின்பமாக அது இருக்கும். மனித வாழ்வின் நோக்கம் ஒரே லட்சியம். அந்த அழியா வஸ்துவை அடைவதே. அழியா பேரின்ப நிலேயிலேயே இருப்பது என்பதைத்தான் எல்லார்க்கும் நல்லவனுகிய எம்பெருமான் பாருக்கெல்லாம் பரம்பொருளான பரமசிவன் நம் சித்தம் தெளிந்து சிவகதி அடைய மூன்றுவதை உணரும் சிவ மருந்தாக மூன்று கண்ணேடு விளக்குகிறுர்

வையகத்தில் பிறந்து வாழ்க்கை புயலிலே சிக்கி ஆடிஓடி ஒடுங்கி ஒய்ந்து மண்ணேடு மண்ணுகமடியும் மனிதன்பிறந்து குழந்தை பருவத்தில் தட்டுத் தடுமாறி நடக்கும் தருவாயில் தன் இருகால்கள்போதாமல் மூன்றுவதாக ஒருபிடிமானத்தை விரும்புகிறுன். வாழ்வு முடியும் வயது முதிர்ந்த நிலேயிலே மூன்றுவதாக ஒரு ஊன்றுகோல் விரும்புகிறுன். இவ்விரண்டுக்கும் இடைபட்ட வாழ்விலே என்சக்தி உன்சக்தி என்ற இவ்விரண்டு சக்திக்கும் அப்பால் மூன்றுவதாக ஒரு சக்தி இருப்பதையே மறக்கிறுன் மானிட பிறவியை, மனித வாழ்க்கையை சிந்தித்து ஆத்மாவை செம்மையாக்க தெரியாத சிறு குழந்தைகளாகிய நாம்,பிறவியின் உயர்ந்த உண்மையை உணராது உலகிலே உழன்று வரும் நாம் குழந்தைபருவத்தில் மூன்றும் உடல் குன்றிய பருவத்தில் மூன்றும் நாடுவதைப்போல, இடைபட்ட வாழ்க்கை பருவத்திலேயும் மூன்றுவது சக்தியை

நினைத்து அறிந்து, உணர்ந்து மூன்றாவது கண்ணாகிய ஞானக் கண்ணை பெற்றிடவே பெறவேண்டும் என்ற சிந்தனையை தூண்டவே முழுமுதற் கடவுள் மூன்று கண்களைக் கொண்டு முதன்மை தெய்வமாக விளங்கி நமக்கு உணர்த்துகிறார்.

இன்றும் எத்தனையோ விதங்களில் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையிலும் ஒவ்வொரு நிலையிலும் இலைமறை காய் போலிருந்து நினைவுறுத்துவதை எழுத எழுத ஏட்டிலடங்காது. எண்ண எண்ண எண்ணி மாளாது.

வையகத்தில் சிறப்புடைய வளமிக்க தென்னாட்டில் தமிழ்நாட்டில் தோன்றிய வல்லுணர்க்கெல்லாம் வல்லவரான வள்ளுவர் வகுத்தளித்த திருமறையான திருக்குறளின் பிரிவு மூன்று திருக்குறள் பிறந்த தேனினும் இனிய செம்மொழி தமிழும் இயல் இசை,நாடகம் என மூன்றுபிரிவு. அணிகலன்களில் சிறந்த திருநீரை நெற்றியில்அணிய மூன்றுவிரல் நாமம் போடும் வைஷ்ணவர்களுக்கும் நாமம் மூன்று. நாம் உண்ணும் காலத்தை காலை, மதியம் இரவு என மூன்றாக பிரிக்கிறோம் வாழும் காலமும் வரும்காலம், நிகழ்காலம், இறந்த காலம் என மூன்றாக பிரிக்கிறோம் செல்வத்தைக் கொண்டு ஒருவனை ஏழை பணக்காரன் நடுத்தரம் என மூன்றாக பிரிக்கிறோம் வீரத்தைக் கொண்டுவிளையாட்டு போட்டியிலே முதல் இரண்டாவது மூன்றாவது என மூன்றாக பிரிக்கிறோம் கல்வியைக் கொண்டு தலைஇடை கடை என மூன்றாகபிரிக்கிறோம்.

ஒருவனுக்கு வாய்ப்பு தருவது மூன்று முறை மன்னித்தாலும் மூன்றுமுறைதான் கல்யாணத்தில் கழுத்திலே போடுவதும் மூன்று முடிச்சு, ஆலயம் சென்றாலும் வலம் வருவது மூன்றுமுறை இவையெல்லாம் மூன்றாக மூன்று பகுதியாக மூன்று நிலையாக யாரால் எவரால் பிரிக்கப்பட்டது? ஏன் எதற்கு பிரித்தார்கள் எந்த காரணத்தை அடிப்படையாக, எதை மூலமாக கொண்டு பிரித்தார்கள். இவைகளை நாமே நம்மை அறியாமல் அவனுடைய சக்தியால் அவனை அறிவதற்காக அவனை அடைவதற்கு காட்டும் அறிகுறியாக நமக்கு

வகுத்தளித்த வரை முறையாகும் சிவபெருமானுக்கு பக்தர்களால் பக்தியுடன்சாத்தப்படும் வில்வப்பத்திரம்காம்பு ஒன்று இலை மூன்று பார்வைக்கு மூன்று இலை உண்மையில் ஓர் இலைதான் ஒரு வில்வபத்திரம்தான் மூன்றும் ஒன்றே ஒன்றேதான் மூன்றும் பத்திரத்தில் பக்குவமான பத்திரமான ரகஸியம் இதுதான்

அவனை தேடி நாடி அவனை நினைத்து வழிபடுவதற்கு சிறந்த இடமாக மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றை அடைகிறோம். இம்மூன்றும் ஒன்ருக ஒருங்கே ஓரிடத்தில் இருக்கும் இடமாகிய காசியை ஞானபூமி, சித்திபூமி, முக்திபூமி என்று நாம் சொல்லவில்லையா? வேதத்தில் விளக்கவில்லையா? இதுபோல நாமும் இருக்கும் இடத்தில் இருந்துக்கொண்டே மறைமுகமாக அவன் உணர்த்துவதை உணர்ந்து சிரத்தையுடன் சிந்தித்து இரண்டோடு இருமாந்து நில்லாமல் மூன்ருவது கண்ணுகிய ஞானக்கண்ணை பெற்று, அழியா பேரின்ப நிலையை அடையவேண்டும். சித்தி பெற்று முக்தி பெறவேண்டும். அன்பே சிவம் அவனின்றி நானில்லை என சிவத்தொண்டர்களாகிய நாம் சிவாய நம என்ருேதி சிவாலயம் சென்று சிவனை நினைத்து சிவபேறு அடையவே அம்முழுமுதற்கடவுள் மூன்ருக பிரிந்து மூன்றும் நானே என முக்கண்ணை உடையவராய் சத்தியம், சிவம், சுந்தரம் என்று மூன்று பெயரோடு விளங்குகிருர்.

ஸ்ரீ ஆதிசங்கரரின்

# ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

திரு. வித்யாதீர்த்ததாஸன் அவர்கள்,
புதுக்கோட்டை (கிழக்கு)

(தமிழாக்கம் கோவை ஸ்ரீ நடேசக் கவுண்டர்)
மலர் 27 இதழ்1 30ம் பக்கத் தொடர்ச்சி)

## 10. திருநீறும் திருப்பேறும்

பிறவியே துன்பமானது. உலகத்தில் மக்களுக்கு நல்வழி காட்டுதற்காக இறைவனது அணுக்கமான தொண்டர்கள் தமது நிலை விட்டு இறங்கி நாயன்மார்களாக அவதரிக்கின்றனர். பெரிய புராணத்தில் இதன் காரணமாகவே நாயன்மார்களைப் பிறந்தார்கள் எனக்கூறுமல், தோன்றினுர், உளரானுர், திருவவதாரஞ் செய்தார் என்பர் சேக்கிழார்.

வைணவத்திலே இறைவனே தனது தடப்பெருங்கருணையினுல் தன்னிலையை விட்டு இறங்கித் துன்பமயமான உலகில் பிறக்கிறுர் என்பர்.

ஞானிகள் பிறப்பை வெறுத்தே பேசுவர். "உடம்பை அழிந்துக் கொள்ளத்தான் விருப்பம். ஆனுல் இவ்வுடம்பு மாறினுல் மற்று எவ்வுடம்பு வருமோ என்ற பயத்தால் இவ்வுடம்பைத் தாங்குகிறேன் என்கிறுர் ஸ்ரீ ராமலிங்கர்.

நயத்தாலுனது திருவருளை நண்ணக்
கொடியேன் நாயுடம்பை
உயத்தான் வையேன் மடித்திடுவேன்
மடித்தால் பின்னருலகத்தே
வயத்தால் எந்த உடம்புறுமோ
என்ன வருமோ என்கின்ற
பயத்தால் ஐயோ! இவ்வுடம்பைச்
சுமக்கின்றேன் பரஞ்சுடரே. (அருட்பா)

சதா துக்கத்திலும் துன்பத்திலும் உழலும் எனக்கு வறுமையும் துன்பமுமில்லாது காத்தருள்கஎன்கின்றுர் ஆசாரியார்.

இன்பமும் துன்பமுமற்ற ஜகத்குரு நமக்காக இப்பாடலைப் பாடுகிறார் அவருடைய குழந்தைகளான நம் துன்பங்களைத் தனதாகப் பாவித்துக் கொண்டு பாடுகின்றார்.

அடியேன் சதாதுக்கி நீ ஏழை பங்கன்
அறியேன் துணைவேறு சிறியேனை நலியும்
மிடியாவும் நொடியே நுண்பொடியாக அருள்வாய்
மிளிர்வேல்! செந்தூரில் அமர்தேவ மணியே! 24

திருச்செந்தூரில் முருகப் பெருமானுடைய திருஅருட் பிரசாதமாக பன்னீர்மரத்தின் இலையில் விபூதிதருவர். இதைத் தனது ''ஆதி குமரகுருபரசுவாமிகள் சரித்திரத்தில்'' கூறும் மகா வித்வான் பிள்ளையவர்கள் ''அழிவில்லாத முருகப் பெருமானை திருச்செந்தூரில் வணங்குவோர்க்கு என்றும் துன்பம் இலை. பகைஇலை. நோயும் நரகமும் இலை. துன்பம் இலை. மீண்டும் பிறப்பு இலை'' என்று கூறுவதுபோல் இலை விபூதி எடுத்து எடுத்து அடியார்களுக்கு வணங்கினர்.

இலை யமில் குமரவேள் முன் வணங்குவார்க் கென்றும் துன்பம்
இலை அடுபகை சற்றேனு மிலை படுபிணி நிரப்பும்
இலை அழற்று ழன்று வீழ்தல் இலை பலபவத்துச் சார்பும்
இலை யென இலை விபூதி எடுத்தெடுத்துதவல் கண்டார்.

வைத்தீஸ்வரன் கோயில் புற்றுமண்ணும், திருச்செந்தூர் இலை விபூதியும் இன்றும் நோய் தீர்க்கும் சஞ்சீவிகளாக விளங்குவது கண்கூடு

''இக்கொடியவளைப் பெண்ணென்று எண்ணாதே. கொன்றுவிடு'' என விசுவாமித்திரர் தாடகையைக் கொல்லுமாறு தூண்டினர். இராமன் தாடகையைக் கொன்றான். இருவருக்குமே தண்டனை கிடைத்தது. இராமன் தன் மனைவியைப் பிரிய நேர்ந்தது. விசுவாமித்திரருக்குக் குன்மநோய் வந்துவிட்டது. செந்தூர் செல்லுமாறு இராமபிரான் விசுவாமித்திரருக்குக் கனவிலே கூறினன். விசுவாமித்திரர் செந்தூருக்கு வந்ததும் முருகப் பெருமான் ஒரு கிழவனாகத் தோன்றி இலை விபூதி தர விசுவாமித்திரரின் நோய் நீங்கியது என்பது வரலாறு.

அப்படிப்பட்ட இலைவிபூதியின் பெருமை பேசி வணங்குகிறார் ஸ்ரீ ஆசாரியாள்

கண்டால் நின் இலை நீறு கைகால் வலிப்புக்
காசம் கயங் குட்ட முதலா நோயும்
விண்டோடு மேபூத பைசாசம் யாவும்
வினையாவுமே செந்திலமர் தேவ தேவே. 25

இறைவன் கொடுத்த உடல் அவனது சேவைக்கேயாகும். வாழ்த்துவதற்கு வாயும் நினைப்பதற்கு நெஞ்சும் வணக்கத் தலையும் தந்தருள்ளான் இறைவன் என்பர் அப்பர் சுவாமிகள். "தனது உடல் பூராவும் இறைவனுக்குச் சேவை செய்ய வேணும்" என்கின்றார் ஸ்ரீ பிள்ளையவர்கள்.

ஒப்பில் நின்புகழே கேட்க என் செவிகள்! ஓங்கு நின்னுருவமே காணத்
தப்பி நின்றனையே பாடியவாய்! கைதவாது நின் அடிப்பணி யாற்ற
இப்படியுறு மேல் செங்கதிருதயம் எத்திசை யெழினு மற்றென்னே
கப்பிணர் தருக்கள் சூழ் திருவானைக் காவாகி லாண்ட நாயகியே.

ஸ்ரீ ஆசாரியாளும் தனது உடல் முருகனுக்குச் சேவை செய்து தானும் முருகனது தொண்டனெனும் பதமடைய விரும்பிப் பாடுகின்றார்.

செந்திற் குமாரனைக் கண்கள் காண்க!
செவிஎந்நை புகழ் கேட்க வாய் கீர்த்திபாடக்
கந்தன் திருத்தொண்டு கைசெய்வதாக
கடையேன் அவன்தொண்டன் எனும் வாழ்வு சேர்க. 26

செந்திலாண்டவன் துணை.

## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரம் — தொடர்ச்சி

### மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியது
### அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு வெளியீடு

(நூலகர் வித்வான் அ. நாராயணசுவாமி அவர்கள் குறிப்புரைகளுடன்)

[ மலர் 27 இதழ் 1- 87-ம் பக்கத்தொடர்ச்சி]

முகரங்கி மடம்

மாதவத் துயர்ந்தா ராய வாகீச முனியை நோக்கிக்
காதல்செய் விபூதிக் கேற்ற கண்மணி விளையும் பூமி
மேதகக் கொளினன் றென்ன வவர்முக ரங்கி மேவி
யோதுமப் பூமி கைக்கொண் டுயர்மட மொன்று செய்தார். 292

பரம்பரையோர்

அற்புதம் பயப்ப விவ்வா றமர்பவர் தமக்குப் பின்பு
சொற்பயி லறம்பா லிக்குந் தூயவர் யாவ ரென்று
கற்பனை கழன்ற தம்பாற் பணிபுரி காட்சி யாருட்
பொற்பமை சொக்கநாத முனிவரைப் புகன்று கொண்டே. 293

அன்னவர் தமக்குத் தீக்கை யாதிய வமையச் செய்தே
யுன்னருங் குமரப் புத்தே ளுண்மையுந் தெளியத் தேற்றிப்
பன்னருந் தம்போற் செய்து பாலிப்பா யறங்க ளென்று
நன்னலம் பயக்குஞ் சொக்க நாதரைக் கயற்க ணுளை. 294

மேதகு திருச்செந் தூர்வாழ் வேலுடைக் கடவு ளாரை
யாதரம் பயப்ப நல்கி யமைதரப் பூசி யென்று
காதல்செ யிடபத் திங்கள் கருதிய கண்ண பக்கந்
தீதறப் பொலிந்து தோன்றுந் திரிதியைத் திதியின் மாதோ. 295

முருகப் பெருமானுடைய அருட்பெருஞ் செல்வராகிய குமரகுருபரர், காசியில் ஆற்றிய அறநெறி செல்வத்தால்; 'சிவனே தெய்வம்' என்று யாவரும் உணருமாறு செய்து மிக்க சிறப்புடன் விளங்கி வந்தார் ]

292. காசியில் வாகீச முனிவராய் விளங்கிய குமரகுருபரரைப் பார்த்து பல சான்றோர்கள் விபூதி நெறியை விளக்கும் ருத்ராக்ஷம் உண்டாகும் இடத்தில் தக்க மடம் அமைத்தல் நலமென விழைந்தனர். அவ்வாறே முகரங்கி என்னுமிடத்தில் தக்க மடம் அமைத்துச் சிறப்புடன் வாழ்ந்தார்.

(293 முதல் 302 வரை)

பரம்பரையோர்

குமரகுருபரர், வாரணசியில், சைவநெறியை விளக்கும் பல அற்புதச் செயல்களை ஆற்றி வாழ்ந்து வந்தா; இத்தகைய சிறப்

அன்றொரு திருச்செந் தூரி லணிகெழு குமர னாகி
நன்றுவந் தருளிச் செய்த நாதரைத் தியானஞ் செய்தே
தொன்றுறு கலப்பிற் செம் பொற் றுணையடிக் கமல நீழ
லொன்றியொன் றாதுமேவி யுலப்பிலா னந்த முற்றார். 296

பின்னர்வண் சொக்க நாதர் பிறங்கறம் பெருகச் செய்து
பன்னெடு நாள்கள் வைகிப் பகரரு ணா- லப்பேர்
மன்னிய வடிக டம்பால் வயங்குதம் முரிமை நல்கி
நன்னர்செ யிடபமாத நயந்தரு கண்ண பக்கம். 297

துவாதசித் திதியிற் செந்தூர்ச் சுப்பிர மணியர் பாதத்
தவாவறுத் தடைந்த தங்க ளாரியன் பாதத் துற்றார்
தவாவரு ணாச லப்பே ரடிகளுந் தருமம் யாவு
முவாவுறு நடத்திப் பன்னா ளொழுக்கத்து வைகிப் பின்னர். 298

அம்பல வாண தேவர்க் கமைந்ததம் முரிமை நல்கி
நம்புறு மகர மாத நயந்தசுக் கிலபக் கத்திற்
பம்பிய திதிபன் னான்கிற் றங்குரு பாதஞ் சேர்ந்தா
ரிம்பரம் பலவா ணப்பே ரிறைவரும் பன்னாள் வைகி. 299

அறத்தினை விருத்தி செய்தே யருட்சடை யப்ப தேவர்க்
குறத்தம துரிமை நல்கி யொளிகெழு கும்ப மாத
நிறத்தசுக் கிலபக் கத்தி னிகழ்திர யோத சிக்கண்
விறற்பெருங் குரவன் பாத மேவின ருவப்பு மேவ. 300

---

பயிரை தமக்குப் பிற்காலத்திலும் தொடர்ந்து ஆற்றுவதற்குரிய வழியை நாடித் தக்கதூயவரை நியமிக்க எண்ணினர் அப்பொழுது தம்மிடத்துப் பணி புரிந்தவர்களுள் சொக்கநாத முனிவர் என்பரையே தொடர்ந்து பணியாற்ற நியமித்தார். அவருக்குத் தக்க தீக்ஷைகளையும் புரிந்து; முருகப் பெருமானுடைய உண்மைத் தத்துவங்களையும் எடுத்தியம்பித் தம்போல் அறச்செயல்களைப் புரியுமாறு கூறியருளினர்; திருச்செந்தூர் வேலுடைப் பெருமானுக்கு முருகப் பெருமானை அருளிப் பூசனை செய்து வழிபாடாற்றுமாறும் இயம்பினர். இவ்வாறு சொக்கநாத முனிவரை நியமித்த பின் ஒரு வைகாசி மாசம் கிருஷ்ண பட்சத்தில் திருதியையில், திருச்செந்தூர்ப் பெருமானை நினைத்த படியே இறைவன் நீழல் எய்தினர்.

பொறுப்பேற்ற சொக்கநாதப் பெருமான் நல்லறங்கள் பல ஆற்றிப் பல நாட்கள் வாழ்ந்து அருணாசல முனிவர் என்ற அடிகளிடத்தில் தம்முடைய உரிமைகளை யெல்லாம் நல்கிவிட்டு இடபமாதமாகிய வைகாசியில், கிருஷ்ணபக்ஷத்தில் துவாதசியில் திருச்செந்தூர் வாழ் முருகனை எண்ணியே உலகினை நீத்தார்.

சடையப்ப தேவ னுருந் தரைமிசைப் பன்னாள் வைகி
யடையப்பே ரறங்க ளெல்லா மமைதர விருத்தி செய்து
நடையுற்ற நலஞ்சா றில்லை நாயக மூர்த்தி யார்பான்
மிடையுற்ற வுரிமை நல்கி விளக்கஞ்சான் மேட மாதம். 301

பூரணைத் திதியி லாசான் பொன்னடிக் கமலஞ் சார்ந்தார்
நாரணை மனத்துத் தில்லை நாயக வடிக ளாரும்
பாரணை யறங்க ளோங்கப் பண்ணுபு காசி வைப்பிற்
சீரணை யொருவர் தம்மைக் காரியஞ் செய்ய வைத்து. 302

திருப்பனந்தாட் காசி மடம்

திரைமலி பொன்னி நாட்டுத் திருப்பனந் தாளின் மேவி
யுரைமலி மடமொன் றுண்டு பண்ணியவ் வூரின் மேய
வரைமலி சிலைகை யேந்தும் வன்சடை யப்பர் கோயிற்
புரைமலி பணிகள் பல்ல பொற்புற வியற்றிப் பின்னர். 303

தந்திரு மடத்து மேய தம்முடை யடியார்க் கெல்லா
நந்திய மகிழ்வி னூட்ட நன்னிலம் பலவுந் தேடி
முந்திய வாசா னும முனிவருக் குரிமை நல்கி
யுந்திய மீனமாத முற்றிடு கண்ண பக்கம். 304

நற்றிர யோத சிக்க ணலமலி யாசான் பாதத்
துற்றினி தமர்ந்தார் பின்ன ரொரு முதற் குரவ னுமம்
பெற்றவர் பன்னாள் வைகிய பெருகிய வறங்கண் முற்றுங்
கொற்றவர் மகிழ்ச்சி மேன்மேற் கொளக்குறை யறந டாத்தி. 305

---

இவ்வாறு பொறுப்பேற்ற அருணாசல அடிகளும் நல்லறங்கள் பல ஆற்றி சைவப் பயிர் தழைக்க, பன்னாள் வாழ்ந்து அம்பலவாண தேவர் என்பார்க்கு உரிமை நல்கி மகர மாதமாகிய தைத் திங்களில் சுக்ல பக்ஷம் சதுர்த்தசி திதியில் முருகனுடைய திருவடி சார்ந்தார்.

அம்பலவாண தேவரும் சைவமோங்கப் பன்னாள் வாழ்ந்து அறம் பல புரிந்து சடையப்பதேவர் என்பார்க்குத் தம் உரிமைகளை நல்கி கும்பமாதமாகிய மாசியில், சுக்கில பக்ஷத்திரயோதசியில், இறைவன் திருவடி எய்தினர்.

சடையப்பதேவர் நல்லறங்கள் பல விருத்தி செய்து தில்லைநாயக மூர்த்தி என்ற அடிகளாருக்கு முறையே தீக்கை செய்து உரிமை நல்கி, மேடமாதமாகிய சித்திரையில் பௌர்ணமி திதியில் தம் ஆசான் பொன்னடிக் கமலம் சார்ந்தார்

சிதம்பர நாத தேவர் கொளத் திரு வுரிமை நல்கிக்
கதம்படு விருச்சி கப்பேர் கலந்திடு திங்க டன்னி
லிதம்படு கண்ண பக்கத் தேற்றசத் தமியி லாசான்
பதம்படு நீழ லுற்றுப் பரவுபே ரின்ப முற்றூர். 306

அச்சிதம் பரநா தப்பே ரடிகளார் பன்னாள் வைகி
நச்சிய காசி யாதி யறமெலா நயக்க வோம்பி
மெச்சிய சடையப் பர்க்கு விரும்புதம் முரிமை நல்கி
யுச்சமார் கும்ப மாதத் துற்றசுக் கிலபக் கத்தில். 307

மருவிய தசமி தன்னிற் குரவர்த மலர்த்தா ளுற்றூர்
தருவினுஞ் சிறந்த வண்கைச் சடையப்ப வடிக ளாரும்
பொருவில்பல் லறமும் பன்னாள் பொற்பொடு பொலிய வோம்பி
யருமையா முரிமைதன்னைக் கணபதி யடிகட் கீந்து. 308

மகரமா மதியிற் கண்ண பக்கத்து நவமி லாய்ந்த
நிகரறு திதியி லாசா னின்மல பாத முற்று
ரகமலர்ந் தறங்க ளோம்பிக் கணபதி யடிக ளாரு
மிகலறப் பன்னாள் வைகி யிசைபல வீட்டிப் பின்னர். 309

முழுதுண ரிராம லிங்க மூர்த்திகட் குரிமை நல்கிப்
பழுதக லிடப மாதம் பரவிய கண்ண பக்கந்
தொழுதகு சிறப்பு வாய்ந்த துவாதசித் திதியிற் றிங்க
ளெழுதரும் புகழ்ப்பே ராசா னிணையடிக் கமல முற்றூர். 310

---

[303 முதல் 315 வரை]

திருப்பனந்தாட் காசிமடம்

காசியில் தில்லை நாயக அடிகள் பல்லறங்கள் ஆற்றிப் அங்குத் தக்கவொரு அடியாரை நியமித்துத் தென்னாடு போந்து பொன்னி நாடாகிய காவிரிபாயும் சோழநாட்டில் திருப்பனந்தாளை அடைந்தார். அங்கிருந்து நல்லறங்களை ஆற்றுதற்குரிய சிறந்த மடத்தை உண்டு பண்ணினார். அங்குக் கோயில் கொண்டுள்ள சடையப்பப் பெருமானை வழிபட்டுப் பல பணிகள் புரிந்து வந்தார்.

அங்குத் தமக்குப்பின் தோன்றும் அடியார்கள் தொடர்ந்து அறம் செய்யும் பொருட்டுச் சிறந்த நில புலன்களைத் தேடியமைத்தார். அங்குத் தம்முடைய வழித்தோன்றலாகத் தம் ஆதிகுருநாதன் பெயரைத்தாங்கும், குமரகுருபரர் என்ற சிவமுனிவருக்கு உரிமை நல்கிப் பின் சுக்ல பக்ஷத்தில் மீனமாகிய பங்குனியில் திரயோதசியில் சிவபதம் பெற்றார்.

ஆதி குருவின் பெயரைப்பெற்ற குமரகுருபர முனிவர், பன்னாள் வைகிக் குறையின்றி நல்லறங்கள் ஆற்றிச் சிதம்பரநாத தேவர்

முன்னிய விராம லிங்க மூர்த்திக டாமும் பன்னுண்
மன்னிய வறங்க ளோம்பி வளமலி யுரிமை யாரும்
பன்னிய சொக்க லிங்க வடிகட்குப் பரவ நல்கித்
துன்னிய மேட மாதஞ் சுக்கில பக்கந் தன்னில். 311

வருசதுர்த் தசியி லாசான் மரைமலர்ப் பாதஞ் சேர்ந்தார்
பெருகருட் சொக்க லிங்கப் பெயர்பெறு மூர்த்தி யாரு
மொருவறப் பன்னுள் வைகி யுற்றபல் லறமு மோம்பிக்
கருதரு முரிமை தன்னைக் கணபதி யடிகட் கீந்து. 312

துகளறு கடக மாதஞ் சுக்கில பக்கந் தன்னி
லிகய்விலே காத சிக்க ணெழிற்குரு பாதஞ் சேர்ந்தார்
புகழ்மிகு கணப திப்பேர் பூண்டபே ரடிக ளாரு
மகமகிழ் பன்னுள் வைகி யறங்கள்பற் பலவு மோம்பி. 313

முழுப்புக ழிராம லிங்க மூர்த்தியார்க் குரிமை நல்கி
விழுப்பமார் துலாமா தத்தின் மேயசுக் கிலபக் கத்தி
லிழுக்கிலே காத சிக்க ணேற்றமார் ஞான மோன
வொழுக்கமார் குரவன் பாத முற்றினி திருந்தா ரன்றே. 314

பூரிய ரென்றுஞ் சாராப் புகழ்மிகு செந்தூர் மேய
சூரிய வடிவேற் செங்கைக் குமரவே ளருளப் பெற்ற
வாரிய ராதி யாகக் கணபதி யடிக ளீருச்
சீரிய வொருபான் மூவர் திறமிவை தெரித்தா மன்றே. 315

---

என்பார்க்குத் தீக்கை செய்தமைத்து விருச்சிக மாதமாகிய கார்த்திகையில், கிருஷ்ணபக்ஷத்தில் தசமியில் இறைவன் நீடில் எய்தினர்.

சிதம்பர முனிவர் காசிமுதல் நல்லறங்கள் பல ஆற்றி சடையப்ப தேவர் என்ற முனிவர்க்குத் தம உரிமை நல்கிக் கும்ப மாதமாகிய மாசியில் சுக்கில பக்ஷ தசமியில் சிவபதம் அடைந்தார். சடையப்ப முனிவரும் பன்னுள் வாழ்ந்து கணபதி முனிவர் என்பார்க்கு உரிமைகளை நல்கி மகர மாதமாகிய தையில், நவமியில் சிவபதம் அடைந்தார். கணபதியடிகளும் அரிய நல்லறங்கள் ஆற்றி இராம லிங்க மூர்த்திகள் என்பார்க்கு உரிமைகளை நல்கி இடபமாதமாகிய வைகாசித் திங்களில் கிருஷ்ணபக்ஷம் துவாதசியில் இறை நீடில் எய்தினர்.

அறப்பயிர் தழைக்க வாழ்ந்த இராமலிங்க அடிகளும் சொக்க லிங்க முனிவர் என்பார்க்குத் தம்உரிமைகளை நல்கி மேடமாதமாகிய சித்திரையில் சுக்கில பக்ஷ சதுர்த்தசியில் இறைபதம் எய்தினர். பொறுப்பேற்ற சொக்கலிங்க முனிவர் பன்னுள் வாழ்ந்து கணபதி அடிகள் என்பார்க்குத் தம் உரிமைகளை நல்கிக் கடகமாத மாகிய ஆடியில் சுக்ல பக்ஷத்தில் ஏகாதசியில் இறைபதம் எய்தினர்.

இந்நூலை ஆக்குவித்தவர் சிறப்பு

இவர்பெரும் புகழை யானே வெடுத்துரை செய்ய வல்லேன்
குவலயத் தறிஞர் யாருங் கூறினு முடியா வாகுந்
தவலறச் சொல்லி முற்றுத் திறத்தினுந் தாழ்வொன் றில்லை
யவமகல் சேட னுலு மறைந்திட முற்று தென்னின். 316

சதுமறை முடிவுந் தேறுத் தத்துவ முணர்ந்து வீர்கா
ளிதுவரை யுரைத்த தோர்ந்தீ ரினிமகிழ் வாய்மை மேன்மை
பொதுவக மொழுக்க மாதி யாவுமோ ருருவாய்ப் போந்த
முதுமதி யிராம லிங்க மூர்த்தி யார் சீர்த்தி சொல்வாம். 317

ஆரரு ளுமையாள் பாக னலயப் பொருள்க டம்மு
ளோரணு வேனும் வெள்ளவு மறக்கடை யோரைக் காணிற்
கார்கெழு நஞ்ச மென்றுங் கறுத்தெழு கூற்ற மென்றும்
போர்கெழு வடவை யென்றும் பொருக்கென வஞ்சு நீரார். 318

காணுதற் கெளியா ராயுங் கடுமொழி யடையா ராயும்
பேணுதற் குரிய வான வொழுக்கத்துட் பிறழா ராயும்
வாணுதற் கொடியோர் பாகர் பணிவயக் கிடுவா ராயும்
பூணுதற் கமைந்த தென்றும் பொறையெனப் பொலியுநீரார். 319

திருவளர் திருவாப் பாடிச் சிவபிரா னமருங் கோயி
லுருவளர் தரப்பு துக்கி யுறுவிழா வாதியோம்பிக்
குருவளர் மணிப்பூ ணுடை குடைகொடி யாதி யாவுந்
தருவளர் கொடையு நாணக் கொடுத்துளந் தழைக்கு நீரார். 320

---

உரிமை பெற்ற கண திமுனிவர் பற்பல அறங்கள் இயற்றிப்பின் பெரும்புகழுடன் விளங்கிய இராமலிங்க அடிகள் என்பார்க்குத் தம் உரிமைகளை நல்கித் துலாமாத மாகிய ஐப்பசியில் சுக்கிலபக்ஷ ஏகாதசியில் குருபாதம் எய்தனுர்.

திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளைப் பெற்ற ஆதி குமர குருபரர் முதல் கணபதி அடிகள் ஈருகப் பதின்மூன்று அடியார்கள் சைவப்பயிர் தழைக்க அருளாட்சி செய்தனர். இத்தகைய அடியார்கள் ஆற்றிய அறநெறிச் செல்வங்களை ஸ்ரீ ஆதிகுமரகுருபரர் வரலாற்றையும், அவருடைய அற்புதச் செயல்கள், தொண்டுகள் முதலியவற்றையும் வணங்கிச் சிறப்புற இயற்றியருளிய, மகாவித்வான் K. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்திலே தோன்றி அருளாட்சி நடத்திய அடிகளே ஸ்ரீ இராமலிங்க முனிவர் ஆவர். இந்நூலை ஆக்குவித்த இராமலிங்க முனிவரின் புகழை முறையே இக் கவிஞர் பெருமான் விளக்கிக் கூறுகின்றுர்,

தம்முதற் குரவற் கன்று தவா வருட் குரவ ஞய
மும்முதற் கடவு ளார்க்கு முதலவன் றிருச்செந் தூரில்
விம்முறப் பூசை யாதி விருப்பொடு நடக்கு மாறு
செம்முதற் பொருணி ரப்பிக் கட்டளை செய்து வைத்தார். 321

தில்லைமா நகரந் தெய்வச் சேய்ஞலூர் திருப்ப னந்தா
டொல்லைமா வினைக ணீக்கிச் சுடர்திரி லோக்கி நாளும்
வில்லைவீ சுயர்பொன் மாட மிளிர்திரு வால வாய்மு
னெல்லையி றலங்க டோறுங் கட்டளை யியங்கச் செய்தார். 322

சீலமார் பெருமான் மேய சிலசில தலங்க டம்மின்
ஞாலமார் கிலமின் றென்னப் பணிபல நகந டாத்திக்
காலமார் பூசை யாதிக் கட்டளை நியம மேவக்
கோலமார்ந் திலங்கு செம்பொற் கும்பாபி டேகஞ் செய்தார். 323

தருப்பல செறியுங் கோயிற் றுடகை யீச்சு ரஞ்சார்
திருப்பனந் தாளின் முன்னுந் திருமடம் புதிய தாகப்
பொருப்புகள் பிளந்தெடுத்துக் கொடுவந்து பொருள்கள் வீசித்
திருப்புகழ் மேன்மே லோங்கச் செய்தனர் வலிய தாயே. 324

அவனியிற் றங்கி ராம மாகிய பலவற் றுள்ளு
முவமையில் கருங்கல் செங்க லெனப்படு முவைகள் கொண்டே
தவலறும் பூசை யாற்றத் தகுமிட மட்டி ஞரு
மிவர்புனற் கூவ லோடு மடம்பல வியற்றி ஞரே. 325

---

## இந்நூலை ஆக்குவித்தோர் சிறப்பு

[மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்து அருளாட்சி செய்த ஸ்ரீ இராமலிங்க முனிவரின் புகழ்ச் சிறப்புக்கள்]

316-318 ஸ்ரீ இராமலிங்க அடிகளின் புகழ்ச் சிறப்புக்கள் உலகில் உள்ள அறிஞர்களாலும் கூறுதற்கரியனவாகும். இவர்பால் எவ்விதத்திலும் குறைகள் காண்பதரிது.

"வேதங்களின் எல்லையும் காணமுடியாத தத்துவங்களையுணர்ந்த அறிஞர்களே! வாய்மை, நீதி, ஒழுக்கம். ஆகிய இவை எல்லாம் ஒருவராக அமைந்த இராமலிங்க அடிகளின் கீர்த்தி, சிறப்புக்கள் ஆகியவற்றை இயம்புகின்றேன். அருளே உருவாக அமைந்த, உமாதேவியை இடபாருடராகக் கொண்ட சிவபெருமான் ஆலயப் பொருள்களில் ஒரளவேனும்கவரும் தன்மையுடையோரைக் காணின், ஆலகால விடமென்றும், இயமன் என்றும், வடவைத்தீ என்றும் அஞ்சும் தன்மையை உடையவர்" என்கிருர்.

319. இவர் காணுதற் கெளியவராயும், கடுமொழி கொள்ளாது, பொறுமை யுடையவராயும் இருந்தார். சிவபெருமான் கோவில் திருப்பணிகள் செய்வதில் ஆர்வம் உடையவராயும் திகழ்ந்தார்.

வடமொழி பயின்று ளார்க்குந் தென்மொழி வளங்கற் றோர்க்கு
மிடவிய வில்லம் பற்பல் பொலி வொடு மியற்றி நல்கிப்
படர்சுவைப் பாலூ ணுடை முதற்பல வளமு நல்கி
மடனறக் காணுந் தோறும் வரிசையி னுவப்புச் செய்வார். 326

இன்றுப நயனஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுகல் யாணஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசோ பனமி யற்ற வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசீ மந்தஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கும். 327

இன்றுபுத் திரன்பி றந்தா னென்றுவந் தியம்பு வார்க்கு
மின்றுநாஞ் சிராத்தஞ் செய்ய வேண்டுமென் றியம்பு வார்க்கு
மின்றுசெல் கின்றேந் தீர்த்த யாத்திரைக் கெனச்சொல் வார்க்கு
மின்றுநம் மிடத்தென் னூர்பொன் னெண்ணில வுதவு நீரார். 328

தென்மொழி வல்ல ராய சீரியர்க் குறுபொன் வீசிப்
பன்மொழி களினு முள்ள பரம்பரன் சரித மெல்லா
நன்மொழிச் செய்யு ளாகச் செய்துநல் குகவென் றோதி
மென்மொழி முகமன் கூறி யாக்குவர் மேன்மே லம்மா. 329

ஆகம புராண மெல்லாம் பழையன வாகக் காணிற்
போகுயர் பனையிற் கொண்ட செழுமடற் புத்த கத்தி
லோகையி னெழுது வோரைக் கொண்டுற வெழுது வித்துச்
சேகறு கருமை யூட்டிப் பாசமுஞ் செறித்துச் சேர்ப்பார். 330

320-325 இவர் திருவாப்பாடி சிவாலயத்தைப் புதுப்பித்துத் திருவிழா நடத்தி இறைவனுக்கு இரத்தினத் திருவாபரணம், உடை, கொடி முதலியவற்றையெல்லாம் கற்பகதரு நாணும்படி கொடுத்து உளம் மகிழ்ந்தார். ஆதிகுமரகுருபரரின் குருவாகியபரம் பொருளாம் திருச் செந்தூர் முருகப்பெருமானுக்கு சிறப்பொடு பூசனை முதலியவற்றை நடத்திச் சிறந்த மூலதனங்களை நல்கி கட்டளைகளை நியமித்தார்.

தில்லை, சேய்ஞலூர், திருப்பனந்தாள், திருலோகி, பொன்மாளிகைகள் விளங்கும். திருவாலவாய் முதலிய கணக்கற்ற தலங்களுக்குப் பூசனைக்கட்டளைகள் நடைபெறுமாறு செய்திருந்தார் சிவபெருமான் உறைவிடமாகிய தலங்களில் கில்மில்லாதவாறு பல திருப்பணிகள் செய்து காலந்தொறும் பூசனைகள் செய்யக்கட்டளைகள் நியமித்தார். சோலைகள் மிக்க தாடகேச்சுரம் என்றும் திருப்பனந்தாளில் உள்ள காசி மடத்தைப் புதுப்பித்துப் பல திருப்பணிகள் செய்தார் அம் மடத்தைச் சார்ந்த பல கிராமங்களில் பூசை மடங்கள் கட்டி நல்ல கிணறுகள் அமைத்தார்.

காசியே முதலி ராமேச் சுரங்கரை யிறுதியாக
மாசிலாத் தரும நாளும் வளர்த்திடு மதனுக் கேற்பப்
பேசிய பொதுப்பே ரானும் பெருஞ்சிறப் புப்பே ரானும்
வீசிநீ ருலகந் தேற விளக்குவார் விளக்க மிக்கார். 331

பொருந்திய திருப்ப னந்தாட் பொலிதிரு மடத்தி னுள்ளாத்
திருந்திய வாதி யாசான் றிருவுருப் பதிட்டை செய்து
பரிந்தபி டேகந் தூய நிவேதனம் பகரு மற்றை
விரிந்தபல் லுபசா ரங்க ணடத்திடு மேன்மை மிக்கார். 332

விடலரும் வேதிகட்டி மிக்கெருப் பெய்து நாளுங்
கெடலருங் கொடிவி ருக்க மாதிய கெழும வாக்கி
யுடலருங் களையுங்கட்டே யொண்புனல் வழியப் பாய்த்திப்
படலரு நந்த னங்கள் பலபணி விடைக்காச் செய்தார். 333

சலிப்பற விடத்தை யோம்பித் தமக்குப் பின் ருங்கா நிற்கு
மொலிப் புகழ்க் கருவி யாய துண்மையி னுணர்ந்து தேடி
வலித்த தென் மொழியி னோடு வடமொழி யுறக்கற் பித்துக்
கலித்தநல் லொழுக்கம் யாவுங் கற்பித்துச் சிறப்புச்செய்வார். 334

அடிமணல் பரப்பி மண்ணு லமைகல மதன்மேல் வைத்துக்
கடிபடு நறும்பூ விட்டுக் கமழ்செயச் சுத்த நீரும்
படியினீர் மோரு மற்றும் பரப்பிய தண்ணீர்ப் பந்தர்
குடிகொள மார்க்கந் தோறுங் கோடை வைத் துவக்கு நீரார். 335

---

326-329 உபநயனம், திருமணம் முதலிய சோபனங்கள் செய்பவருவோ ருக்கும் தீர்த்த யாத்திரை போவோர் முதலியோர்களுக்கும் பொருள்களை நல்கினர். தமிழ் மொழிப் புலவர்கட்குப் பல பொருள்களை நல்கியதோடு, பல தலங்களில் அமைந்த சிவபுராணங்களைத் தமிழ் மொழியில் எழுதுமாறு செய்து அவர்கட்குச் சிறந்த பரிசில்களை நல்கினர்.

ஆகமங்கள் புராணங்கள் முதலியன பழையனவாகக் காணப்பட்டால் தக்கபடி எழுதுபவர்களைக் கொண்டு நல்ல ஓலைகளில் எழுதுமாறு செய்து கருமையூட்டிக் கயிறு சாற்றிச் சேர்த்து வைத்தார்.

330-337 ஸ்ரீ காசி முதல் இராமேச்சுரம் வரை நல்லறங்களை வளர்த்தார். அவற்றைக் காசி மடத்தின் பெயரால் அமைத்தார். திருப்பனந்தாளில் ஸ்ரீகுமரகுருபர ஸ்வாமிகள் உருவப் பிரதிட்டை செய்து, பரிவொடு அபிஷேகம், தூய்மையான நிவேதனம் முதலியன முறையே செய்ய ஏற்பாடு செய்திருந்தார்.

இறைவனுடைய பணிவிடைகட்காக நல்ல நிலங்களை அமைத்துத் திருத்தி நந்தவனம் அமைத்து கொடிகள், விருஷங்கள் முதலியன உண்டாக்கியிருந்தார்.

கருங்கடல் குடிக்குங் கொண்மூக் கற்பகங் காமதேனு
விருங்குணப் பதுமஞ் சங்க மெனப்பொலி நிதியி ரண்டு
சுருங்குத லில்லா மேன்மை தொகுசிந்தா மணியிவ் வெல்லா
மொருங்குசேர்ந் துருக்கொண் டென்னப் பொலிகொடை
யுடைச் செங் கையார். 336

அகலிடத் தனைத்துஞ் சங்கை யறவறி பவர்தா மேனு
மிகலருந் தமது செல்வ மிவ்வள வெனத்தே ராமை
புகலரு முன்பெற் றோர்பின் புகினுமங் கறித ராமை
பகலரு மிவ்வி ரண்டு நீங்குறுப் பண்பு மிக்கார். 337

வேறு

பூமேவு திருச்செந்தூ ராறுமுகப் பெருமானார் பொற்றாள் வாழ்க
தேமேவு மவரருள் சார் குமரகுரு பரமுனிவர் சீர்த்தி வாழ்க
மாமேவு மவர் மரபிற் பதின்மூவர் புகழுமப்பால் வந்தோ ராகித்
தாமேவு மிராமலிங்க வடிகளும்பின்வருவோருந் தழைத்துவாழ்க.

குமரகுருபரஸ்வாமிகள் சரித்திரம் முற்றிற்று.

---

இவர் சிறந்த இடத்தை அமைத்து என்றும் நிரந்தரமாக இருக்கும் பொருட்டுத்தமிழும் வடமொழியும் கற்கப்பாடசாலைகள் அமைத்தார். பாதைகளில் கடுமையான கோடைக்காலத்தில் பாதைகளில் சிறந்த தண்ணீர்ப் பந்தல்களை அமைத்து பானைகளில் நறுமணமிக்க தூய்மையான நீரும், பனகமும் வைத்து அருந்துமாறு செய்திருந்தார். இவர், மேகம் (கொண்மூ) காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சந்தாமணி ஆகிய இவையெல்லாம் ஒன்றினுற் போன்ற கொடை வள்ளலாய்த் திகழ்ந்திருந்தார்

இவர் சிறந்த செல்வங்களைப் பெற்றுத் திகழ்ந்ததோடு, இவருடைய பூர்வாசிரம தந்தை முதலியோர் இவரைக் காணவரினும், அவர்களையும் அயலவராக எண்ணி தொண்டர்களுள் வைத்து எண்ணும் கொள்கையாராயும் விளங்கிப் புகழுடன் சிறந்தார்.

(இவ்வாறு இவர்புகழை ஸ்ரீ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சிறப்பித்துக் கூறுகின்றார். இத்துணைச் சிறப்பொடு வாழ்ந்து அருளாட்சி செய்த இவர் காலத்திற்குப் பின் முறையே தோன்றிய முனிவர்களும் நல்லறங்கள் பல ஆற்றினர். இத்தகு சிறப்புடன் விளங்கும் அறங்களைக் குறைபாடின்றி மேன்மேலும் செழிப்புறச் செய்து, இப்பொழுது சிறந்த முறையில் ஸ்ரீ முத்துக் குமரஸ்வாமிகள் அவர்கள் அருளாட்சி செய்து சிறப்புறத் திகழ்கின்றார்கள்.

வாழ்த்து

புகழ்மிக்க திருச்செந்தூர் ஆறுமுகன் திருத்தாள் வாழ்க, அவர் அருள் பெற்ற ஸ்ரீ குமரகுருபரர், அவர் மரபில் வந்த பதின் மூவர் தலைவர்களின் புகழும், அவர்கட்குப் பின்வந்த இராமலிங்க அடிகளும், அவர்கட்குப் பின் வருவோரும் வளம் பெற்று வாழ்க வாழ்க,

143.

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

118. திருக்கழுமலம் பண்: புறநீர்மை

மடல்வலி கொன்றை துன்றுவா ளெருக்கும்
வன்னியும் மத்தமும் சடைமேல்
படலொலி திரைகள் மோதிய கங்கைத்
தலைவனூர் தம்மிடம் பகரில்
விடலொலி பரந்த வெண்டிரை முத்தம்
இப்பிகள் கொணர்ந்துவெள் ளருவிக்
கடலொலி ஓதம் மோதவந் தலைக்கும்
கழுமல நகரென லாமே.

**பொழிப்பு**: இதழ் மிகுந்த கொன்றைப் பூவும், நெருங்கிய ஒளியையுடைய எருக்கம் பூவும், வன்னியிலையும்; ஊமத்தம் பூவும் உள்ள சடையின் மேல் ஒலி அடங்கிய அலைகள் மோதும்படியான கங்கையாளுக்குத் தலைவனுரது இருப்பிடத்தைச் சொன்னால் (அது) வீசும் ஒலிமிக்க வெள்ளிய அலைகளால் முத்துக்களையும் சிப்பிகளையும் கொண்டு வந்து வெள்ளிய நீர்ப் பெருக்கை உடைய கடலின் மிக்க வெள்ளமானது கரையில் மோதி அங்குமிங்கும் அலைபாய்கின்ற திருக்கழுமல நகரம் என்று கூறலாம்.

மடல்–இதழ்; மலி–மிகுந்த; துன்றுதல்-நெருங்குதல்; படல் ஒலி என்பதை ஒலிபடல் திரைகள் என மாறுக. கங்கைத் தலைவனுர்-கங்கை மணாளரான சிவபெருமான். விடல்-வீசுதல். திரை–அலை; வெள்அருவி-வெண்மையான நீர்ப் பெருக்கு ஒலி ஓதம்-மிக்க வெள்ளம். ஒலி-மிகுதி. மோத வந்து-மோதி; இப்பதிகத்தை ஓதுபவர் பிணி நீங்கி வானிடை வாழ்வார்கள் மண்மிசைப் பிறக்கமாட்டார்கள். இப்பதிகத்தில் "ஆணையும் நமதே" என்று ஞானசம்பந்தர் ஆணை கூறியுள்ளார்.

119. திருவீழிமிழலை பண்: புறநீர்மை

புள்ளித்தோல் ஆடை பூண்பது நாகம்
பூசுசாந் தப்பொடி நீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டம்
காளியைக் குணஞ்செய்கூத் துடையோன்

அள்ளற்கார் ஆமை அகடுவான் மதியம்
ஏய்க்கமுட் டாழைகள் ஆனை
வெள்ளைக்கொம் பீனும் விரிபொழில் வீழி
மிழலையான் எனவினை கெடுமே.

பொழிப்பு: ஆடை புள்ளியுள்ள வேங்கைத்தோலாகவும், அணிவது பாம்பாகவும், பூசிக் கொள்ளும் மணப் பொருள் பொடியான திருநீருகவும், விளக்குச் சுடுகாட்டின் கொள்ளித் தீயாகவும், இனமான கூட்டம் பேய்களாகவும் கொண்டு, (சினந்து வந்த) காளியை அமைதி படுத்துகின்ற கூத்தாட்டத்தை உடையவன் யாரெனில், சேற்றில் உள்ள கருமையான ஆமையின் வயிறுனது விண்ணில் தோன்றும் சந்திரனை ஒத்திருக்க, முள்ளையுடைய தாழைமரம் யானையின் வெண்மையான கொம்பைப் போலப் பூக்களை விரியச் செய்கின்ற சோலைகளையுடைய திருவீழி மிழலையில் இருப்பவன் ஆவன் என்று சொல்ல நமது வினைகள் அழிந்தொழியும்

நாகம்-பாம்பு; சாந்தம் - மணப்பொருள்; பொடிநீறு-தூளான திருநீறு; கொள்ளித்தீ - கொள்ளிக்கட்டை எரியும் போது தோன்றும்ஒளி; கூளி—பேய்; குணஞ்செய்தல் என்பது ஈண்டு அமைதிப் படுத்தலைச் சுட்டியது. அள்ளல் - சேறு; அகடு—வயிறு; ஏய்த்தல் - ஒத்திருத்தல். ஆமையின் வயிறு வெண்மையாக இருக்குமாதலால் திங்களை ஒக்கும் என்றார். தாழையின் பூ யானைக்கொம்பை ஒத்திருக்கும் என்பது மரபு. கூத்துடையோன் யாரெனின் வீழிமிழலையான் என்று கூற வினைகெடும் எனமுடிக்க. இப்பதிகத்தை ஓதுகின்றவரைத் தேவர்கள் வழிபடுவர்.

(தொடரும்)

---

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

வந்து விட்டது! வந்து விட்டது!

# திருமந்திரம்

## (நான்காம்) புதிய பதிப்பு!!

பிரதி ஒன்றின் விலை ரூ. 6–

தபால் கட்டணம் தனி

சென்ற நான்கு ஆண்டுகளாக திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் பன்னிருதிருமுறை பதிப்பு 'திருமந்திரம்' பிரதிகள் விற்பனைக்கு இல்லாதிருந்தும், புதிய பதிப்புக்கு விடாமுயற்சி செய்து வந்தும் திருவருட்டுணை கிட்டாமையால், ''திருமந்திரம்'' புதிய பதிப்பு வெளியாவதில் மிக காலதாமதமானது பற்றி மிக வருந்துகிறோம்.

அன்பர்கள் பலரிடமிருந்தும் இது பற்றி கடிதங்கள் வந்தவண்ணமாகவே இருந்தன. பதில் எழுத முடிந்த மட்டிலும் பதில் கொடுத்து வந்தோம். ஷி பதிப்பு அச்சேற்றும் சென்னை சண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட் அச்சகத்தாரும் முழுமனதுடன் உதவி வந்தும், எதிர்பாராத காரணங்களால் இவ்வளவு காலதாமதமானது பற்றி வருந்துகிறோம்.

இனியும் பன்னிருதிருமுறை பதிப்பில் இதுபோல் காலதாமதம் ஏற்படாத வண்ணம் பன்னிருதிருமுறை பதிப்பைப் பாதுகாத்தருள செந்திலாண்டவன் திருவருட்டுணையை திரிகரண சுத்தியுடன் இறைஞ்சுகின்றோம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயம்

பரம்பரை மானேஜிங் டிரஸ்டிகள், ஸ்ரீவைகுண்டம்.

---

குறிப்பு: இன்னும் மூன்றே மாதங்களில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (தலமுறை) நான்காம் பதிப்பு வெளி வரும். அதற்கான அச்சுப்பணி குமரகுருபரன் அச்சகத்திலேயே நடைபெற்று வருகிறது.

திருச்செந்திலாண்டவன் துணை

## "குமரகுருபரன்" பத்திரிகைக்கு ஆயுள் சந்தா ரூ. 100/- (நூறும்) அன்புடன் வழங்கிய நண்பர்கள் விபரம்

| தொடர் எண் | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | திரு. ஆ. ந. கருப்பசாமி பிள்ளை, அவர்கள் | 56 வடக்கு ரத வீதி, தூத்துக்குடி. |
| 2. | ,, P. P Shanmuga Mudaliar, அவர்கள் | Colour yarn M·rchant TIMIRI P.O. N.A.Dt. |
| 3. | ,, செயலாளர் அவர்கள் | மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி (அ.நி.) ஈரோடு வழி, கோவைமாவட்டம் |
| 4. | ,, பண்ணுடி N S. நல்ல சாமி அவர்கள் | ஓ.நஞ்சகவுண்டன்பாளையம் ஓடத்துறைP.O.ஈரோடுவழி |
| 5. | ,, V.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் | முத்துவீரண்ண செட்டித் தெரு ச. வாழப்பாடி அஞ்சல் சேலம் மாவட்டம். |
| 6. | ,, S ராஜகோபாலன் அவர்கள் | உரிமையாளர் வள்ளி தீப்பெட்டி தொழிற்சாலை சங்கரநயினார்கோவில் திருநெல்வேலி மாவட்டம் |

மகாமகோபாத்தியாய

# டாக்டர் உ. வே. சாமிநாதையர்

## நூல் நிலையம்

திருவான்மியூர், சென்னை 600041.

# ஒரு நல்லவாய்ப்பு

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் பிறந்த 121—ஆவது வருடமாகிய இந்த ஆண்டில் தமிழ்மக்கள் அவருடைய நினைவைக் கொள்ளுவதற்கு வாய்ப்பாக அவர் பெயரால் இயங்கும் நூல் நிலைய வெளியீடுகளும், ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களும் சலுகைவிலையில் கொடுக்கப்பெறும் ரூ 60/-(அறுபதுக்கும்) அதற்கு மேலும் ரொக்கமாக ஒரே தடவையில் இந்த நூல்களை வாங்குபவர்களுக்கு விலையில் 33⅓ சதவீதம் தள்ளிக் கொடுக்கப்படும். இந்தச் சலுகை 1-7-75 முதல் 30-6-76 வரை உண்டு இது சம்பந்தமான தபாற்கட்டணம் இரயில், லாரிக் கட்டணம் புத்தகம் பெறுபவர்களைச் சார்ந்தவை.

புத்தகங்களைப் புதன்கிழமை நீங்கலாக மற்ற நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள்) நூல் நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி எண் 411697)

விவரங்களுக்குப் பின்வரும் முகவரிக்கு எழுதுக:

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம்.
திருவான்மியூர், சென்னை 600041.